427

ஓம்

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கச] தாது—சித்திரை [பரல்-கூ

## திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்

### திருப்பைஞ்ஞீலி

மருவிலார் திரிபுர மெரிய மால்வரை
பருவிலாக் குனித்த பைஞ்ஞீலி மேவலான்
உருவிலான் பெருமையை யுளங்கொ ளாதவத்
திருவிலா ரவர்களைத் தெருட்ட லாகுமே.

பதவுரை :—

மருவிலார் திரிபுரம் எரிய—தன்னைச் சாராத அரக்கர்களுடைய திரிபுர நகரானது தீயினால் எரிந்து அழியும்படி

மால்வரை—பெரிய மகாமேரு மலையை

பருவிலா குனித்த—பெரிய வில்லாக வளைத்த

பைஞ்ஞீலி மேவலான்—திருப்பைஞ்ஞீலி என்ற திருப்பதியில் (திருக்கோயில் கொண்டு) வீற்றிருக்கிறவனும்

உருவிலான் பெருமையை—யாதொருவடிவமு மில்லாதவனுமாகிய சிவபெருமானது அருட் பெருந்தன்மையை

உளம்கொளாத—மனதில் நினைந்து அறியமாட்டாத

அத்திருவிலா அவர்களை—அந்த அருளில்லாத மக்களை

தெருட்டலாகுமே—(அவ்வருட் பெருந்தன்மையை அறிந்த ஒருவர்) அறிவுறுத்தித் தெளிவாய் அறியும்படி செய்யமுடியாது.

428



விளக்கவுரை :—

பருவிலாக் குனித்த—பரு வில்லாக என்பது பருவிலா எனத் தொக்கு நின்றது தொகுத்தல் விகாரம். இதனால் சிவபெருமானுடைய பேராற்றல் குறிப்பிடப்பட்டது.

உருவிலான் பெருமை—உருவில்லான் என்பது உருவிலான் எனக் குறைந்துநின்றது. இனம்பற்றி அருவமும் அருவுருவமும் இல்லாதவன் என்பதும் கொள்ளப்படும். சிவபெருமான் உயிர்கள் பொருட்டு ஐந்தொழில் செய்தற்கண் அருவம் அருவுருவம் உருவம் ஆகிய வடிவங்களைக் கொள்வானாயினும் தனது சிறப்பு நிலையில் உருவமுதலியன இல்லாதவன் என்பார், 'உருவிலான்' என்றார். "சிவனருவுருவு மில்லான்" எனச் சிவஞான சித்தியார் கூறுதல் காண்க (முதலாவது சூத்திரம் 71-வது பாட்டு). பெருமை என்பது இங்கே அருட்குணங்களால் நிறைந்தபெருந்தன்மை; எல்லா உயிர்களும், தம்மை அநாதியே சேர்ந்துள்ள மலங்களினின்று நீங்கி மெய்யறிவு விளங்கப்பெற்று இன்பநலம் அடையக்கருதி எப்பொழுதும் அருட்செயல்கள் செய்துவரும் பெருந்தன்மை. "பெருமைக்கும் நுண்மைக்கும் பேற்றினருமைக்கு மொப்பின் மையான்" என்ற திருவருட்பயன் முதலாவது அதிகாரச் செய்யுட் கருத்தைநோக்குக.

உளங்கொளாத அத்திரு இல்லார் அவர்கள்—கடவுளிலக்கணம் உயிரிலக்கணம் கடவுளுக்கும் உயிருக்கும் உளதாகிய அத்துவித இலக்கணமாகிய இவ்வுண்மைகளை நூல்கள் ஓதி அறிந்தும், ஓதி அறிந்தவர்பாற் கேட்டும் தெளிந்தவர்கள் மாத்திரம் கடவுளின் அருட்பெருந்தன்மையைத் தமது உள்ளத்தில் விளங்கும்படி அறிவாரன்றி ஏனையோர் அறியார்ஆகலானும், அவ்வாறு, தெளிவாய் அறிதற்குத் திருவருளின் துணைவேண்டுமாகலானும் 'உளங்கொளாத அத்திருவிலார்' என்றார். அத்திருவிலார் என்பதில் 'அ'என்பது அறிசுட்டுப் பெயராய் உலகில் இக்காலத்தைப் போல் முற்காலத்திலும் காணப்பெறும் கடவுட் கொள்கையில்லாதவர்களை (நாஸ்திகரை)க் குறிக்கிறது. அவர்கள் பகுதிப் பொருள் விகுதி.

தெருட்டலாகுமே—ஏகாரம் இங்கே தெருட்டலாகாது என்ற எதிர்மறைப்பொருள் தந்துநின்றது. தெருட்டல்—பிறவினை; தெருள்—தன்வினை; தெருள்வித்தல்;—தெளிவாய் அறியும்படி செய்வித்தல்; இக்கருத்தைத் திருமூலர் திருமந்திரம் 2327-வது பாட்டில் "அறிவிக்கவேண்டா அறிவிற்றயர்வோர்க்கு" என்று கூறினர். மாணிக்கவாசக அடிகள் "கொடிறும் பேதையும் கொண்டது விடா" என்று அத்திருவிலாரை அஃறிணைப் பொருளோடு ஒப்பக்கூறினர்—போற்றித்திரு அகவல், 63-வது வரி: திருவாசகம்.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

# தமிழ்த்தாயின் தண்ணொளி

[செஞ்சி திரு. S. K. இராமசாமி பிள்ளை அவர்கள்]

கட்டுரைப் பொருள் தமிழ், தாய், தண்மை, ஒளி, என நான்கு சொல் மூன்று சந்தியால் ஆன தொடர் ஆம். இங்கு தமிழ் என்பது இனிமை எனும் பொருளில் வரும். அருள், சாந்தம், பெருமை உடைய இடத்துத் தாய்மை விளங்கும். தண்மை குளிர்ச்சி என்பதாகும். ஒளி - பிரகாசம்; இங்கே கீர்த்தி எனும் பொருளில் அடங்கும்; அதாவது, தாய்மை உடைய தமிழ்தனது கீர்த்தி என்பதாம்.

உலகில் பிறந்த மக்கட் கூட்டத்தினருள் ஜப்பானியர், அமெரிக்கர், மேலையர் இவர்கள் எல்லாம் தம் தாய்மொழிக்கு மதிப்புத் தந்து, பின் பிறமொழியைப் பயில்வர். அதனால் அவர்கள் எல்லை கடந்த பெருநிலை உற்று வருகின்றமை புலப் படக் காண்கின்றோம். அப்படியே தமிழினிடம் ஆர்வம் உள்ள தமிழனும் முன்னேற்றம் அடைவான் என்பதில் ஐய மில்லை.

தமிழ் நம் நாட்டில் எக்காலத்துத் தோன்றியது எனக் காண்கின்றார்கள்! இதற்கு இன்னும் காலவரையறை காண முடியவில்லை. ஆனால் தமிழரோ பேச்சு வழக்கில் தேய்ந்து பிற பாஷையாளர்களாகவும் சிலர் மாறிவிட்டனர். அவர் கள் பாஷை தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் ஆம். இதனைத்தான் திரு. சுந்தரம் பிள்ளை அவர்கள்

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலை யாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்"

எனப்பாராட்டிப் புகழ்ந்தார்.

தமிழில் மிக்கசுவை, கருத்தமைவு, நோக்கப்பெருக்கம் காணலாம். சிலபாஷைகளில் இலக்கண அமைதி இருக்காது. தமிழினிடம் இத்தகைய குறை காணமுடியாது. பாஷை தத்துவம் உணர்ந்தவர்கள் பிறபாஷையின் இன்சுவையைக் காட்டினும் தமிழினிடம் சுவை மிகுதி இருக்கக்கண்டுளோம் எனக்கூறியுள்ளார்கள். இதை நம் பாரதியார் பிரபந்தத்தில்,

"யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்"

என்றார். நுட்பம், திறமை, கவர்ச்சி இவைகள் ஒவ் வொன்றினும் பொதிதல் வேண்டும். அவை முற்றும் நம்

தமிழினிடம் இருக்கக் காணலாம். அச்சம், வன்பு முதலிய செருக்குச் சொற்கள் தமிழினிடம் அதிகம் கிடைக்கக் காணோம். அன்பு, தலைமை முதலிய அமைந்த தொடர்களை மிகைபடக்காணலாம்.

இத்தமிழ், பிறபாஷையினிடமிருந்து வந்ததா? அன்றி பிற பாஷையின் உதவியை நாடியயேயுளதா? தனித்தியங்குஞ் சக்தி உண்டா? என்றின்னோரன்ன வினாக்களை வெளியிட்டு இடர்ப்படலும் உண்டு. தமிழினிடம் மேலே கண்ட குறைபாடு ஒன்று மில்லை. தமிழ் தமிழரதேயாம். ஆங்கிலத்தில் 1000 ஆண்டிற்கு முன்னிருந்த கருத்துச் சொற்கள் எல்லாம் இப்போது மாறி இருக்கக் காணலாம். ஆங்கிலர் அடுத்தடுத்து மாற்றியதைப்போல் இன்றி, ஒன்பதாயிரம் ஆண்டிற்கு முன்னிருந்த தமிழ்க்கருத்து நடை முதலியன இப்போதும் அப்படியே இருக்கக் காண்கின்றோம். ஆனால் ஆயிரம் ஆண்டிற்குமுன் வட்டெழுத்தாக இருந்ததை மாற்றி இப்போதிருக்கும் எழுத்தாக ஆக்கினர். இந்த ஒரு மாறுதல்தான் தமிழினுக்குண்டு.

தமிழினுக்குத் தண்ணொளி வர ஒரு காரணம் உண்டு. பிறபாஷைகளில், முன்னர் கதைகள் (இதிகாசம்) தோன்றின; பின்னர் தான் நீதிகள் ஏற்பட்டன. தமிழர் நாகரிகத்தில் மூத்தவர் என்பதற்கு உதாரணமாக "ஆயுந்தொறும் இன்பம் தரும் கல்வி" எனத் தணிகைப் புராணத்தும், "தேருந்தோறும் இனிதாந்தமிழ்" எனக் கோவை ஆராய்ச்சியிலும் விளங்க வைத்துள்ளனர். தமிழில் நீதி முன்னே தோன்றி பின் இதிகாசம் ஏற்பட்டது. இது நம் தமிழினுக்கு ஒரு பெருங்கீர்த்தி விளைப்பதாகும். நம் தமிழ் அறிவுறுத்துவதில் எவ்வளவு ஆழ்ந்த கருத்தை உடன்கொண்டு நிலவவல்லது என்பதைக் காண்பாம். இது,

"கல்வி மம்மர் அறுக்கும் மருந்து"

"உறுங்கவல் ஒன்று உற்றுழியும் கைகொடுக்கும்"

"உற்றுழி உதவும் கல்வி"

"நெஞ்சின் மெலிவிற் கோர் துணையுமாகும்"

என்பனகாணின் புலனாம். அன்றியும் கல்வியை மிகைபடுத்த எண்ணிய நமது மூலர், கடவுளை யடைதலுக்கும் கல்வி இன்றி அமையாதது என்பதை உட்கொண்டு "எல்லா உயிருக்கும் இறைவனே ஆயினும் கல்லார் நெஞ்சத்துக்காண

ஒண்ணாதே” என்றார். “கற்றிலனாயினும் கேட்க அஃ தொருவற் கொற் கத்தினூற்றாந்துணை” என வள்ளுவர் கேட்டலின் சிறப்பை ஓதுவாராயினார். இங்ஙனம் இதன் புகழ் கேட்கப்புலனாம். உண்மையில் தமிழினிடம் ஒரு பெருஞ்சக்தி உண்டு. ஒருவன் தமிழ் கற்கின் அவன் பெரியோருக்குக் கீழ்ப்படிவான்; தீயசெயலுக்கு அஞ்சுவான்; கடவுளைப் போற்றுவான். பிறபாஷையில் இவைமுடியா. ‘அவலைநினைத்து உரலை இடிப்பதா’ என்பதுபோலப் பிற ஏதுக்களை நம்பித் தமிழை விடுகின்றனர். இஃது பெற்ற தாயினை மறந்து செவிலித்தாயினைப் பெற்றதாயெனக் கொள்ளுமாறொக்கும். இது சரியன்று. தமிழின் தண்ணொளியை உய்த்துணரின் பின் பெருமை பெருகும்.

---

# இந்து சீன நாகரிகம்

நான்கு ஆண்டுகட்கு முன், ஜப்பானியர் செய்த வெடிகுண்டொன்று வெடித்ததினால் பண்டைக்காலத்ததாகிய “சைனீஸ் வால்” என்ற சீனச்சுவரின் ஒரு பகுதி வெடித்துச் சிதறியது. அதிலிருந்து ஒரு சீன ஏடு அகப்பட்டது. அதை **ஸர் அகஸ்டஸ் பிட்ஸ் ஜீயார்ஜ்** என்ற பெரியார் விலைக்கு வாங்கி இலண்டனுக்குக் கொண்டுவந்து சீனப் பண்டை வரலாற்றாராய்ச்சிக்கழகத்தாரிடங்கொடுத்து ஆராய்ச்சி செய்தார். அதன் பலனாகப் பின்வரும் விந்தையான உண்மைகள் வெளியாகின்றன:—

1. வேதமொழியில் 10,000 ஆண்டுகட்குமுன் எழுதப்பட்ட மனுநீதி நூலைப்பற்றிய குறிப்புகள். அவற்றை அடிப்படையாகக் கொண்டு சீனச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

2 புல்லாகிப் பூடாகிப் புழுவாகி மரமாகி என்ற வளர்ச்சி நெறிமுறை அதிற் குறிக்கப்பட்டுளது.

3. காயகற்பங் கண்டுபிடிக்கும் வழி சீன மக்கட்குத் தெரிந்திருந்ததாகப் புலப்படுகிறது.

4. இந்தியா, அமெரிக்கா, சீனா ஆகிய மூன்று நாட்டு மக்களிடையே பல ஒற்றுமைகளிருந்தமைக்குச் சான்றுகள் கிடைக்கின்றன.

(கா. சிவ. க.)—“இந்து”

---

# புதுக்கவிகள்-Original Poetry

## "செந்தமிழ்ச் செல்வி"

[வித்துவான் இரா. சிவ. சாம்பசிவ சர்மா எழுதியது.]

படிபுகழ் செந்தமிழ்ச் செல்வி பண்பெலாம்
முடிமுதல் அடிவரை முழுதுஞ் சொற்றிடக்
கடிகண பதிபதம் கருத்தி ருத்தியே
அடிமையிற் சிறியனே னன்புசெய் வேனே.

---

திருவளர் தெய்வத் தமிழ்மொழித் தாய்க்குப்
பெருமை தருசீர்த் தலைடணி செப்பிற்
சீரார் சித்தாந் தசிகா மணியொடு
பேரார் சூளா மணி,சூ டாமணி;
செந்தமிழ்ச் செல்வியின் செவ்விய கேசம்
முந்தையோர் போற்றும் முதுமைசால் நீல
கேசியு மதன்தெருட் டுரையுமாங் கிளப்பின்;
வாசமார் கேசப் பாலுறுப் பைந்தும்
பஞ்சம ரபோடு, பஞ்சபா ரதீயம்
என்றே புகல்வர் எழில்நூற் புலவர்;
தண்டமி ழன்னையின் தலைத்தெய் வமாலை
விண்டிடக் கேட்பின் வியன்தே வாரமே;
நாட்டுறு புகழ்கொள் நலமிகு மன்னை பூச்
சூட்டுதான் யாதெனில் சுட்டுவன் கேண்மோ
ஆத்தி சூடியு மணிபெருங் குறிஞ்சியும்
ஏத்திடு கோன்றை வேந்தனு மென்பரால்;
அற்றெனி லன்னை த னணிதிரு முகத்தைத்
தெற்றெனக் கூறெனிற் றெரிப்பன் கேட்பீர்
பீடார் களிற்றுப் பிறங்குநல் முகம்போல்
ஈடிலா வேழ முகமென இயம்புவன்;
சால்புடைக் கண்கள் சச்ச புடமோடு
நூலாம் முத்தோள் ளாயிரம் பகர்ந்தேன்;

மணிநிகர் சொற்கள் மாண்புற மொழியும்
அணிபெறு வாய்திரு வாய்மொழி அறிவீர்;
பற்கடாம் நித்தில வரிசைகொள் முறுவல்,
கற்பார் விழையுங் கவின்திருப் பல்லாண்
டாமென மொழிவர் அருந்தமிழ்ப் புலவோர்;
தேமொழி வாசகம் திருவா சகமே;
இசையோ என்னில் இசைப்பன் கேண்மோ
நசையுறு சிற்றிசை, பேரிசை நவின்றேன்;
ஈரெண் கரண கலைக ளியம்பிடில்
பாரெலாம் புகழிசைத் தமிழோடு பத்தும்
ஆறுங் கூட்டிய படலமாம் அறிவீர்;
வீறுடைத் தமிழ்த்தாய் வியந்திடுந் தெய்வ
இசையின் நுட்பமோ இசைநுணுக் கமேயாம்;
இசைப்பா வென்னெனில் எழில்திரு விசைப்பா;
குண்டல மாகுமால் குண்டல கேசியே
கண்டிகை வியாழ மாலையாங் கணிப்பீர்;
சங்கத் தலைவராஞ் சாற்றுநக் கீரர்சொல்
அங்கதப் பாட்டே அணிமிகு தோள்களாம்;
வஞ்ச மில்லா நெஞ்சென மிளிர்வது
நெஞ்சு விடுதூ தெனுந்தமிழ் நூலே;
அன்பி னைந்திணை யெனுமடி முதலும்
நன்பொருட் களவியல் நன்பெரு முயிரே;
தோலா நாவின் மேலோர் மொழிகொள்
நூலாம் மங்கல நாணென வறிக;
பெருகுறு மன்பு பிறங்கிடக் குருகும்
பெருங்குரு கும்மாம் பீடார் தனங்கள்,
நார்மிகு தமிழ்த்தாய் நலமார் சிறப்பொடு
வார்கட் டியாதென வகுத்திடில் யாப்புக்
காரிகை தன்னொடு கவின்யாப் பருங்கலம்
பேரிசை கொள்மா மூலர் யாப்பும்
மகேச்சுரர் யாப்பும் மாண்புறப் பொருந்தும்;
பாகே யனைய பைந்தமிழ் மொழியாட்
கொத்த தனவடம் நித்திலக் கோவையே;
புறமுது கதுவே புறத்திரட் டாகும்;

புறமுது கணிதான் புகலக் கேண்மோ
புறப்பொருட் பன்னிரு படலமுஞ் சிறந்த
புறப்பொருள் வெண்பா மாலையு மாகும்;
பலதமிழ் அறிஞர் பிறந்தநல் வயிறே
உலகெலாம் புகழ்யசோ தரகாப் பியம்மே;
உந்தியோ அழகார் திருவுந்தி யாரே;
விந்தையா மிடையோ வியன்துடி நூலே;
மேகலை தானும் மணிமே கலையே;
நாகரும் போற்றும் நந்தமிழ்ச் செல்வியின்
காஞ்சியோ முதுமொழிக் காஞ்சியும் மதுரைக்
காஞ்சியும் மார்க்கண் டேயனார் காஞ்சியும்
ஆமென வறைகுவ ரருந்தமிழ் அறிந்தோர்;
சீரார் கோவை திருக்கோ வையாரே;
ஏரார் பருமம் எழிலார் செய்யுட்
கோவையென் றுரைப்பர் கோதிலா அறிஞர்;
விரிசிகை தானும் வியன்பெறக் கூறின்
தெரிதரு தொண்ணூற் றறுவகைச் சாத்திரக்
கோவையென் றுரைப்பர் கோதில் புலவர்;
பாவைதன் கடிதடம் பகர்தரு புலவோர்
அரும்பைத் தொள்ளா யிரமென அறைகுவர்;
விரும்பும் தமிழணை வியப்ப விளங்கும்
திவாகரம் கயாகரம் திகழ்தரு கரங்களாம்;
அவாவுறு கைவளை அணிவளை யாபதி;
மோதிரந் தானும் மோதிரப் பாட்டே;
சீதமார் கமலத் திருவடி தானும்
அலைகட லுலகத் தனைவர் நெஞ்சமும்
கலைகடல் மூழ்கிக் கவின்பெறச் செய்தே
தமிழகந் தனக்கே தனிப்பெரும் பெருமை
இமிழ்திரை ஞால மேத்த வளித்த
வள்ளுவர் செய்திரு வள்ளுவர் ஆகும்;
தெள்ளிய சிலப்பதி காரம் தமிழணை
உள்ளி யணிந்த உயர்பெறு சிலம்பே;
ஓசைசெய் தளையு மோரின் குறுங்கலி
காசில் கலி,பெருங் கலித்தொகை என்பர்;

அணியை நோக்கின் அணியியல் அதனெடு
மணிநூ லாகும் மாறன் அணிநூல்,
தண்டியின் அணிநூல் ஆமெனச் சாற்றுவர்;
அன்னேபே ரழகும் அறையக் கேண்மோ
முன்னிய பெருங்கலம் மாபுரா ணம்மே;
ஒப்பனை தானும் ஓவிய நூலே;
செப்பில் விரையும் களரியா விரையே;
அரண்மனை திருமந் திரமாம் அனைக்கே;
முரண்பகை முறுக்கும் மலையரண் கூறின்
கூடற் குழகனைக் கூறுகல் லாடமும்
நாடுறு நாக காப்பியம் மேரு
மந்தர புராணம் ஆமென மொழிவர்;
அந்தமார் நீரரண் அணிபெரு நாரையே;
குடியிருப் பதனைக் கூறிடுங் காலை
படிபுகழ் தோல்காப் பியமெனப் பகர்வர்;
ஆணை அகத்தியர் ஆணையென் றறிக;
மாண்புறு கொடியோ மணியார் கோடிக்கவி;
பரதம் பகரின் பரதம் செந்தமிழ்ப்
பரத சேனு பதீயம் சுத்தா
நந்தப் பிரகா சமாமென நவில்வர்;
எந்தாய்க் ககப்பொருள் இசைப்பன் கேண்மோ
அந்தமில் சிறப்பார் அகநா னூறே;
புறப்பொரு டானும் புறநா னூறே;
இறப்பில் புகழ்பெறு மிசைத்தமி ழனைக்குக்
கைத்தண் டதுவாய்க் கலைக்கோட் டுத்தண்
டித்தரை போற்று மெழிற்பெருங் கதையெனப்
புகலுவர்; மணிசிந் தாமணி புகன்றேன்;
இகல்மிகு சக்கர மிசைத்திடின் நேமி
நாதம் என்ப; நவிலேங் குழூவும்
ஓதுறு ஐங்குறு நூறும் ஓர்ந்திடின்;
அமிழ்தினு மினிய தமிழ்மொழி யனைக்குத்
தமிழ்விடு தூதே தகைசான் றிலங்கும்;
எண்வகை ஆயம் எட்டுத் தொகையே;
பண்பார் தசாங்கம் பத்துப் பாட்டே;

அறுமூன் றடக்கிய ஆயம் அறைந்திடில்
சிறுபெரு நூற்களாய்ச் சிறந்திடும் பதினேண்
கீழ்க்கணக் கென்ப ; கிளரைந் திணையும்
தாழ்ச்சியில் ஐந்திணைத் திறன்தெரி குறிஞ்சி
முல்லை பாலை மருதம் நெய்தலை
சொல்லிய நூற்களுஞ் செப்புதற் குரித்தே ;
பட்டப் புரவியோ பரிபா டலாமே;
பட்டிற் சுற்றிப் பரவிடுஞ் சைவ
சித்தாந் தசாத்திரம் செப்பும் உண்மைகொள்
கொத்தார் நூலில் குலவுறு களிற்றுப்
படியே அரசுவா பகர்ந்திடி லனைக்காம் ;
துடியே ரிடைகொள் தூய்தமி ழன்னையின்
மேலாங் கூத்தோ கூத்தும் கூத்த
நூலோடு சிறந்த நுண்மதி வாணன்
நாடகத் தமிழும் நவிலுவர் புலவர்;
பீடார் தமிழ்த்தாய் பிறங்க வாளம்
தாள சமுத்திரம், தாளவோத் தாகும்;
இன்னன கொண்ட வெமதனை யாகும்
பொன்னிகர் செந்தமிழ்ச் செல்வியாம் பைந்தொடி
குணகடற் குடகடற் குடகம் வேங்கடம்
எனுந்தமிழ் நாட்டி னெழிலர சேற்றுத்
தவமார் மதுரைத் நலைநகர் அமர்ந்து
புவனம் போற்றப் புரந்து பொலிவாள்
நலமிகு நூன்மணி திரைகொண்
டுலகோர் பரவ உவகையிற் சிறந்தே.

---

வாழிநம் செந்தமிழ்ச் செல்வியார் வாழியே
வாழிநம் வள்ளுவர் வாய்மொழி என்றுமே
வாழிநம் தமிழகம் வாழிநம் புலவர்கள்
வாழிநம் பனுவல்கள் வாழிய உலகெலாம்.

# இலக்கணமும் இலக்கியமும் :
## LANGUAGE AND LITERATURE

### பாயிரப் பொருள் தோகையும் விரிவும்

[பெஸ்கி என்னும் வீரமாமுனிவர்]

(௫௬௮-ம் பக்கத்தொடர்ச்சி)

#### விரிவு

விரிவெனினும் பரவெனினு மொக்கும்; (மேற்) பதிகத் துதாரணமாக வெடுத்த குறளுண் முதற்பயனாகிய மனத்தின் றாய்மையா லறமெலாம் பெறும் பெருமையு முடையன வென்பது பலவகத்திணையால் விரித்து விளக்கியவாறு. அற மென்னப் பட்ட யாவு மன்னுயிர்க்கோருயிராகவு மனத் திற்கோரணியாகவு நெஞ்சத்திற்கொரு செல்வமாகவும் வழங்கு மியல்பினையுடையன வாகையிற் புறத்துத் தோன்றும் வேற்றுருக் கோலங் காட்டி யகத்துண்ணுழையா வறமோ வறத்தின் பேறும் பெருமையு முடைய வென்பர். எப்பொரு ளினு மதனுண்மை யுணர்தலே ஞானம். உணர்ந்த பொருளி னிவையே நல்லவை யெனவு மிவையே யல்லவையெனவுந் தெளிதலே காட்சி. தெளிந்தவழியே யல்லவை யொருவி நல்லவை மருவியொழுகலே யொழுக்கம். இந்நல்லொழுக் கமே மனைத்தறனுகையிலிவையெலா மனமுயற்சியாலாக வேண் டுழி மனமொவ்வா வறனெல்லாம் பொய்யென விகழப்படு வதுமுறையே யென்பது. இவையு மித்தொடக்கத்தன பலவும் இயல்பகத்திணையாம்.

அன்றியும் பிறர் நோய் கண்டகத்திரங்கா னையோவென வாய் பொய்த்த விரக்கங்காட்டல் தயையோ! நெஞ்சங் கடுத்த சுடும்பகை கொண்டான் முகநகநட்பது நட்போ! ஒன்றீந் தொரு பத்தடித்துக் கொள்ளத் துணிந்தான் பிறர்க்கீந்துத வுதல் கொடையோ! மனை நகர்நாடு மகல நீக்கி யுட்பொரு ளின்ப மனுகு மாசை நீங்கான் மறுதுணையில்லா வனம்புக் குறைதல் துறவோ! பிணியுறப் பசிமிகப் பகைப்பட மொய்த்த துன்ப மின்பமென வுணர்ந் தகங்கலங்காதான் புறத்தும் புலம்பாதிருப்பது பொறையே. பிறரழகாசை மனம்புகாத் தன்னிறைகாத்த மகளிர் புறத்துக் காட்டு மொடுக்கமுங் கற்பே. தன் மனக்கோட்டங் கண்டு நாணு

தல் நாணமே. மனத்திலிறைஞ்சிப் பிறரைப் பணிவான்
புறத்துப் பொய்யாச் சொல்லின் வணக்கமும் பணிவே.
உள்ளத்திற் கலங்கா தெதிர்வெம்போர் முகத்தஞ்சான் றுணி
வாய சேவகந்தானும் வீரமே. இவ்வாறனைத்தறன் மனத்துக்
கண் மாசிலனாதலாகுமன்றே என்பதிவையு மித்தொடக்கத்
தன பலவும் வகையகத் திணையாம்.

அன்றியும் உள்ளொவ்வாமற் புறத்துத் தோன்றுஞ் சித்
திர வறத்தின் சாயலும் பயன்றரு நல்லறமெனப் படுமாயின்
நாண் கொண்டாட்டிய புன்மரப் பாவையுங் களி கொண்
டாடிய கருங்கட் பாவையும் வேறுபாடின்றி யொக்கு மென
வும், கண்ணே கனிய வழகு காட்டி யுள்ளுயிர் கொல்லு நஞ்சு
டைக் காஞ்சிரப் பழனும், புறத்து வீசு மணமே யொப்ப
வகத்து மினிய தேறல் கொண்ட மாங்கனி தானுமொன்றென
வும், ஒளி பெற வெழுதிய வோவியப் படமு முயிர் பெற்றிமிழ்
வாழுடலு மொன்றெனவு மிவை வேறல்லவென்புழி யன்றே
மனமுள்ளொவ்வா வரைந்தோன் முகத்தெழும் பொய்யறச்
சாயலு நெஞ்சில் வீற்றிருந் தினிதிற் புறத்துத் தோன்று
மெய்யறமாட்சியு மொன்றெனச் சொல்லவும் படுமே. பசிய
பொற்றூணிரைத்து நாட்டி, நெற்றியிற் பவள போதிகையேற்
றுபு, வயிர நன்மணி யுத்திரம் பாய்த்திப் பளிக்குச் சுவர்மேன்
முகிலகடுரிஞ் சுயர் சிகர மொளியின் மணியாற் கூட்டி, வாணி
கர் மாளிகை யருந்தொழிற்றச்சர் வழுவற முடிப்பினு முள்ளா
ளரசன் கொடுங்கோலோச்சுங் குரூரனாயி னுலகிலாய வொரு
பயனுண்டோ? அவ்வா றொருவனரு மறையோதினும், அரும்
பெரு கலை நூலளவறக் கற்கினும், பல நதியாடினும் பல தலஞ்
சேரினும், வரைவில் கொடுப்பினும், வழுவில் நடப்பினும்,
கோயின் மண்டபங் குளமுதற் பற்பல வாயிற் றரும மெனவு
வந் தியற்றினும், திரட் பொருளீட்டிய செல்வந் துறப்பினும்,
மனை நகர் நாடு மகார்மனை சுற்றமுந் துறந்தரும் வனத்திடை
துணையற உறையினும், இன்புறு சுவை சுகமெல்லா மறுத்தே
யைம்பொறி கொன்றுடலழிய நோற்பினும், ஈரறவழியெலா
நேரச் செல்லினும், மனத்தூடிய வினை மாசுளனாயிற் றனக்
கொரு பயனுந் தகாதென வுணர்க. ஒளிபெறப் பசும்பொன்
புறத்துப் பூசி யுளுப்பாந் தழிமரப் பாவையாகவும், அழகிடத்
தீட்டிய கோலங் காட்டித் தீண்டா வங்கப் பானையாகவும்,
வெருவிடக் கொடும்புலி நெடுந்தோற்போர்த்துப் பசும்புன்மே
யிழிவுறுங் கோவாகவும், நன்மனத்தூய்மை நண்ணு வற
னெலா முட்பயன் கண்டவ்வளவி லனைத்தையு மெண்ணு
மிறைவன் முகத்துத் தோன்றுமே, என்பதிவையு மித்

தொடக்கத்தன பலவும் உவமை யகத்திணையா யெதிர்நிலையும் வகையுஞ் சிறப்புங் கலந்தவாறு காண்க.

அன்றியு மிவற்றிற் கெல்லாங் காரணமியாதெனி னுயிரு முடலுமென விரண்டொன்றாய்ச் சேர்ந்த பொருளே மனிதனாகையி லவற்று ளுயிரளவின்றி மிக்கதா யுயிர்சேரறமு மிக்க வெனப்படும். உடற்கொண்டறத்திற்குரிய செயினு மவை யறமல்ல, வற வுடலாயவற்றுள்ளமுங் கூடினுயிருள வறமாம். நிறநன்றாயினுங் காஞ்சிர நன்றோ? மீளவு முலகிருளகலச் செங்கதிர் பரப்பிய பருதியே போல மனவிருளிரியத் திருவொளிக் கதிரென வேதநூலுரைத்துத் தந்த விறையோன் விலக்கின நீக்கலும் விதித்தன வாக்கலு மெய்யற மாகையி லவற்கோரிருளில தெளிவிற் றோன்றுமனத் துட்டியவை யுளவெனிற் புறத்துக் காட்டிய நல்வினை யறமெனப் படுவதோ? இறைவற்கேற்பன செயலே யறமெனின் மனத் தழுக்காறவற் கேலாதிருக்க மைந்தர்ப் புகழ்வதியற்றலா லாவதென்னோ? தானே விதித்த வறநல் வினைக்குத் தானே பயன்றரத் தருவனாகையி னுள்ளுந் தெரிந்த தன்கண் வெறுப்ப வொருவன்கொண்ட மனமா சுளவெனி லினித்தா னவற்கறப் பயனைத்தருவனோ! தோன்றியொழியுமின்னொளி போல வுட்பயனறியா மாந்தர் வாய்ப்புகழொன்றேமனமா சொவ்வாப் புறத்தறன் சென்ற பயனெனத் தெளிவிற்றேறிப் பொன்றின பின்னிவனால் வரும் புகழா நிற்புழி, தானெரி நிலத்தின் வருந்தி நிந்தைப்படுவதே நீர்மையன்றெனச் சிந்தையின் மாசில சீரறம் போற்றுக என்பதிவையு மித்தொடக்கத்தன பலவுங் கருவி காரிய மேன் றீரகத்திணை வந்தவாறு காண்க.

அன்றியுங் கயவருந் தாமொரு காயுங் கனியு முயிரறக் கொய்த வொரு மரக் குறையுமற்றெப் பொருளும் வந்து கொளுங்கா லுட்குறையின்மை யுணர்ந்துநாடி, கட்கினிதாகிய காஞ்சிரமொருவி முட்புறவுட்சுவை முதிர்கனி நன்றென நோக்கியும், புறமெண் ணுதுள்ளுழி வுற்றன நீக்கியுட் டகையது கொள்வாரன்றோ வெஞ்ஞான்றும் வானமேலினி தினழியா மெஞ்ஞானப் பயன் றரு மெய்யறமொன்றே யிவ்வாறெண்ணுதிவையே யுட்பயனவ்வவர் தாயினுமைந்தர் புகழுறப் புறத்துச் சாயல் போது மென்றறத்திறத்துத் தானுளுந் தெளியா தென்னோ? என்பதிவையு மித்தொடக்கத்தன பலவும் ஆக்கப் புறநிலையகத்திணையாமெனக் கொள்க.

அன்றியு "மனவிருளிரிய மணி விளக்காகத் தனி யருளிறைவன் றந்த மறைநூ லாய்ந்துழி யீண்டி யானறைந்த

யாவும், வாய்ந்த மெய்யென வழங்கித் தோன்றுமே, நம்வா யென்புகழ் நவன்று பாட, வெம்வா யெரிப்பெலி மென்மேற் கொன்றிட, வப்புகழ்ப் பெலியனேயறும் மன, மொப்பிலா தென்னையொருவி நிற்றலா லவைவெலாம் பொய்ப் பொருளாகக் கைக்கொளா நவையென வெறுத்தனே நானே'' யெனவும்........''மாசிலான் மறையென வறைந்தபின் மனத்துண் மாசிலனுதலே மாண்புறு மனைத்தறனல்லது தீயவை யகத்தொளித்தினிய வல்லுருக் காட்டன் மாணற மென்பவோ'' என்பதிவையு மித்தொடக்கத்தன பலவு நூற்புறத் திணையாம்

அன்றியும் 'ஈண்டுப்பிறிதின் வேறொரு சாட்சி, வேண்டுமோ தனக்கு மெய்தானுரைப்பிற், புறத்தறச் சாயல் புகயிப் பிறர்மெய்த் திறத்துளத் தம்மை தீயெனச் சுடச்சுடச் செறிவாய் மருளறத்தெளிந்து மெய்ம்மை கண்டறிவாரறப் பயனை யுட்பட்டார்'' இதனாலன்றோ ''வானுயர் தோற்ற மெவன் செய்யுந் தன்னெஞ்சந் தானறிகுற்றப்படின்'' என்றா ரன்றியும்,— ''நீட்டிய சடையுமாகி நீர்மூழ்கி நிலத்திற் சேர்ந்து வாட்டிய வுடம்பின் யாங்கள் வரகதி விளைக்குமென்னிற் காட்டிடைக் காடிபோகிக் கயமூழ்கிக் காட்டினின்றும் வீட்டினை விளைக்கும் வேண்டும் வெளிற்றுரை விடுமினென்றான்''............இங்ஙனே புறத்தவ வேடமன்றி யுள்ளத்தூய்மை யில்லா முனிவர்க்குச் சிந்தாமணியிற் சீவகன் சொன்னான். ''வானோர் புகழ்ந்து வணங்கிய துறவுந் தானோர் பயனிலை தாராதகத்தழுக் காறுளதே யெனி லகத்துளறத்தின் பேறுள தென்பது பிழையோ வென்பர்'' என்பதிவையு மித்தொடக்தன பலவுங் கரிப்புறத்திணையாம். இவ்வாறேனைத் திணை வேண்டுளி விரித்துக் கூறுக.

---

# குறுந்தொகை

## மூலமும் விளக்க உரையும்

[இலங்கையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

### பாலை

தலைவியை விட்டுப் பிரிந்த தலைமகன் தான் மீண்டு வருவதாகக் குறித்த இளவேனிற் பருவம் வரவும் வந்திலனாகலின் அவன் வரவு காணாது ஆற்றாளாகிய தலைவி தோழிக்குத் தன் மெலிவு உரைத்தது.

பரணர் பாடியது

24\. கருங்கால் வேம்பி னொண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்
தெழுகளிறு மிதித்த வொருபழம் போலக்
குழைய வெமைநீத் தகன்ற
நாம்வெங் காதலர் நல்கார் கொல்லோ.

என்பது பருவங்கண்டு ஆற்றாளாகிய கிழத்தி யுரைத்தது.

பதவுரை:—கரும் கால் வேம்பின் ஒண் பூ யாணர்—பெரிய கால்களுடைய வேம்பினது ஒள்ளிய பூக்களின் புது வருவாயையுடைய இளவேனிற்காலம், என்னை இன்றியும் கழிவது கொல்லோ—என் தலைவனை நான் கூடுதலின்றியும் கழிந்திடுவதாகுமோ? ஆற்றயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து—ஆற்றின் கரையில் உயர்ந்தோங்கி வளர்ந்த வெண்மையான கொம்புகளையுடைய அத்திமரத்தினது, (உதிர்ந்த) எழுகளிறு மிதித்த ஒரு பழம்போல—ஆற்றில் நீராடியெழும் யானை காலால் மிதித்துச் சிதைத்த ஒரு பழத்தைப்போல, சிதைய எமை நீத்து அகன்ற—எம் நலனழிந்து சிதையும்படி நீக்கிப் பிரிந்து சென்ற, நாம் வெம்காதலர் நல்கார் கொல்லோ—நாம் விரும்பும் நம்மைவிட்டுப் பிரிந்ததினால் கொடுமையை நமக்களிக்கும் தலைவர் காலமறிந்து நம் நலனழி வுறாதபடி வந்து காக்க மாட்டாரோ?

"தலைவன் பிரிந்து சென்றபோது குறித்தகாலம் இளவேனிற் பருவம். அப்பருவம் வந்தது; இன்னும் அவர் வந்திலர். என்நலன் அழிகின்றது. இது அழியாதபடி தாம் குறித்தகாலத்தை அறிந்து அத்தலைவர் வாராரோ தோழி!" எனத்தலைவி வருந்தினள் என்க.

வேம்பு இளவேனிற் காலத்தில் பூக்கும் இயல்பினது. அத்திப்பழத்தை யானை காலால் சிதைத்தல் போல் தலைவியின் மென்மை வாய்ந்த எழில் நலம் யானைபோன்ற தலைவரது பிரிவினால் அழிதலுற்றது.

யாணர்—புதுவருவாய். ஆகுபெயர். "யாணர் வைப்பு" (அறம்-2-11) "பிரசந்தூங்கும் அறாஅயாணர்" —(புறம்-375-9)

'அருஅயாணர்'—(பொருந-1-ந) 'இடையறாத செல்வ வருவாய் —நச்சர் (பொருந-1.) என்பன காண்க. "யாணர் ஊரன்"

—(குறுந்-85)

அத்திமரக் கொம்பு வெண்மையானவை என்பது "வெண் கோட்டதவம்" என்பதாலறிக.

எழுகளிறு—வினைத்தொகை.

இச்செய்யுளில் ஈற்றிலுள்ள ஈரடிகளும் கீழ்வருமாறு காணப் படுகிறது :—

"குழையகக் கோடியோர் நாவே
காதல ரகலக் கல்லென் றவ்வே" என்பது

பிரதிபேதம். இது கொள்ளத்தக்கதாயின்,

"தலைவரது நாவாற்கூறிய சொல் என்மனம் வருந்துமாறு கோடியது; காதலரது நெஞ்சம் கல்லைப்போல் வலிமையுற்றது" எனத்தலைவி வருந்திக் கூறியதாகும்.

கல்லென்றவே—என்பது கல்லென்றவ்வே—விரித்தல் விகாரம்.

"குழையக் கோட்டியோர்
நாம் வெங் காதலர்க் கலவென் றவ்வே"

—(பிரதிபேதம்)

"குழையக் கொடியோர் நாவே
காதல ரகலக் கல்லென் றவ்வே"

—(பிரதிபேதம் இஃதாயின்)

குழைய—காதலர் பிரிவால், களிறுமிதித்த அத்திப்பழம் குழை வது போல நம் மனம் குழைய, காதலர் அகல—தலைவர் விட்டுப் பிரிந்துசெல்ல, கொடியோர் நா—கொடியவர்களுடைய நாக்கள், கல் லென்றவ்வே—பழிச்சொற்கள் கூறுவனவாயின—என்க.

"காதலர் நம்மைவிட்டுப் பிரியவே, களிறு மிதித்த அத்திப்பழம் குழைவதுபோல, நாம் உள்ளங்குழையுமாறு, கொடியோர் பழிச்சொல் கூறுவாராயினர்"—பரணர்—(வே. வேங்கடராஜுலு ரெட்டியார்) —(பக்-47)

இதுவும் சிறப்பின்மை யறிக.

"பெரியதாளையுடைய வேம்பினது விளங்கும் மலரின் புதுவரு வாயையுடைய இப்பனிக்காலந்தான், எனது தலைவன் இல்லாமலுங் கழிந்திடுமோ? ஆற்றின் அயலிடத்து எழுந்த வெள்ளிய கோட்டினை யுடைய அதவத்தினது, எழுகின்ற களிறு மிதித்திட்ட ஒரு பழத்தைப் போலக் குழையும்படி நம்மைத் தந்திறத்து வளைத்துக்கொண்டோ ராகிய நாம் விழைந்த காதலர்க்கு உண்டாயின வல்ல; எனதுதுயர் போன்ற துயர்கள் ஆதலின்" என உரைகூறுவாரும் உண்டு.

என்னை—என் தலைவன்.

"அன்னை என்னை என்றலு முளவே"—(தொல்—பொருள்—பொருளியல்-52) என்பதால் தலைவி தலைவனை என்னை என்றாள். தவ்—என்று கொள்வராயின் அது குறிப்புமொழி; துயரத்தைக் காட்டிற்று. இது குறிப்புமொழியாதலை, வள்ளுவரும், "கவ்வையாற் கவ்விது காமமதுவின்றேற் றவ்வென்னுந் தன்மை யிழந்து"—(குறள்—அலர் அறிவுறுத்தல்-4) என்றதுங் காண்க.

**மெய்ப்பாடு**—இழிவுபற்றிய அழுகை.

**பயன்**—அயர் வுயிர்த்தல்.

---

# திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் தலைமைப் பேருரை*

தமிழின்பால் உள்ள அன்பு மிகுதியால் இங்கே கூடியிருக்கும் உடன் பிறப்பாளர்களே! நுங்களால் இக்கூட்டத்திற்குத் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற யான் வழக்கம்போல் முன்னுரையாகச் சில பேசவேண்டுமென்றும், பேசுவேன் என்றும் நீங்கள் விரும்புவதும், எதிர் பார்ப்பதும் இயல்பே. இச்சங்கத்தின் பெயரையே பற்றுக்கோடாகக் கொண்டு எனக்குத் தோன்றுங் கருத்துக்கள் சிலவற்றை இப்பொழுது வெளியிட விரும்புகின்றேன்.

## தமிழின் பெருமை

இது "கம்பர் செந்தமிழ்ச் சங்கம்" எனப் பெயரிடப் பெற்று வழங்கி வருகிறது. செந்தமிழ் என்றால் என்னை? ஆன்றோர் பலரும் நம் தமிழ் மொழியின் பெயர் கூறும்பொழுது செந்தமிழ், பைந்தமிழ் இன்றமிழ், மென்றமிழ், வண்டமிழ், ஒண்டமிழ் என்று இங்ஙனம் சிறந்த அடைமொழிகளோடு சேர்த்துரைப்பது வழக்கமாக உள்ளது. அவ்வடை மொழிகளெல்லாம் தமிழின் சிற்சில சிறப்பியல்புகளைக் குறிப்பனவாக வுள்ளன. செந்தமிழ் என்பது திருந்திய தமிழ் என்னும் பொருளுடையதாகும். தமிழ் மொழியானது நெடுங் காலத்தின் முன்பே திருத்தமான நிலையை அடைந்துளது. திருத்தமாவது இலக்கண வரையறை செய்யப்பெற்றுப் பெரும்பாலும் அவ்விதிகளுக்கு இணங்கி நடைபெற்று வருவது. மொழியானது ஆதியில் வழக்கும செய்யுளுமாக வளர்ச்சியுற்று வரும்பொழுது அவற்றின் சொற்கள் இடந்தோறும், நாள்தோறும் வடிவு திரிந்தும், பொருள் வேறுபட்டும் செல்வது இயல்பாகலின் அவற்றை அங்ஙனமே விட்டுவிடின்

---

* இஃது 1936-ம் ஆண்டு மார்ச்சு 21, 23-ந் தேதிகளில் **நுழித்தலை, கம்பர் செந்தமிழ்ச் சங்கத்தின்** பதின்மூராம் ஆண்டு விழாவின் போது, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தலைமை தாங்கி நிகழ்த்தியதாகும்.

எண்ணிலாத மாற்றங்களுக் குட்பட்டு முன் பின் தொடர்பின்றி யொழியு மென்பது கருதி, அக்காலத்து நன்மக்களின் வழக்கினையும், செய்யுளையும் நன்கு ஆராய்ந்து பேரறிஞர்கள் இலக்கணம் வகுப்பா ராயினர்.

## இலக்கணம்

உதாரணமாக ஒன்று காட்டுகின்றேன். யான், யாம் எனத் தன்மையிலும், தான், தாம் எனப் படர்க்கையிலும் இருப்பதுபோன்றே முன்னிலைப் பெயரும் நீன், நீம் என ஆதித் தமிழில் இருந்தன வாதல் வேண்டும். வேற்றுமையுருபேற்கும் பொழுது ஏனையவை போலவே நின்னை, நின்னால் என முதல்குறுகி, னகர வொற்றோ டிருப்பது கொண்டும் அவற்றின் முதற்பெயர் 'நீன்' என்று தெளியலாகும். யாங்கள், தாங்கள் என்பவற்றின் முதல்நிலை யாம், தாம் என்பனவாதல் போல நீங்கள் என்பதன் முதல்நிலையும் நீம் என்றிருப்பது முறையன்றோ? அங்ஙனமாகவும், முதனூலாசிரியர் இலக்கணம் வகுத்த காலையில் அச்சொற்களின் உருவம் சிதைந்து நீ, நீயிர் எனவே நன் மக்கள் வழக்கிலும், செய்யுளிலும் காணப்பட்டமையால் அவையே முன்னிலைப் பெயராகக் குறிக்கப்படலாயின. இவ்வாறாக ஆன்றோரால் வகுக்கப் பெற்ற இலக்கண வரம்புகளோடு பொருந்திச் சிதைவின்றி வழங்கிவரும் மொழியே செந்தமிழ் எனப்படுவதாகும். ஆதித்தமிழ் சிற்சில இடங்களில் நாடோறும் உருச்சிதைந்து வெவ்வேறு வகையாக மாறுதலடைய, அவை கன்னடம், தெலுங்கு முதலிய வெவ்வேறு திராவிட மொழிகளாயின. அம்மொழிகள் தாமும் காலத்துக்குக் காலம் பெரிதும் மாறுபா டெய்தி வந்து தம் முன்னைய வுருவினை முற்றிலும் இழந்து நிற்கின்றன. செந்தமி ழொன்றுமே எஞ்ஞான்றும் உருச்சிதையாது வழங்கி வருகின்றது. அதற்குக் காரணம் அதன் இலக்கண வரம்புடைமையே. அதனாற்றான், தமிழினைப் பாராட்டப் புக்க பெருமக்கள்,

"கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ"

என்றிங்ஙனம் இலக்கணத்தை விதந் தெடுத்துரைத்து, அதன் பெருமை தெரிப்பாராயினர். பண்டுதானே இலக்கணம் நன்கமையப் பெற்ற மொழி, பின் பெரிதும் சிதைவுறுதற்கு இடனின்று. ஒரோ வழிப் பழையன கழிதலும், புதியன புகுதலும் உள. அவற்றிற் கேற்பப் பின்வருஞ் சான்றோர்கள் வழிநூல் இயற்றிப் போதருவர்.

## இலக்கியம்

தமிழ்மொழியிலே பண்டை யிலக்கியங்களாக விளங்குவன கடைச் சங்கப் புலவர்களியற்றிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலியன. அவை இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளின் முற்பட்டவையாகும். தொல்காப்பியம் என்னும் தமிழிலக்கணம்

அவற்றிற்குப் பன்னூறு ஆண்டுகளின்முன் தோன்றியதென நிலை நாட்டப்பெறுகின்றது. அந்நூல்தான் வழக்குஞ் செய்யுளும் ஆராய்ந்து முந்து நூல்கண்டு இயற்றப் பெற்றதெனக் கூறப்படுகின்றது. தொல்காப்பியர் தமது நூலிற் பலவிடத்து முன்னையோர் துணிபினைக்குறிப்பிட்டுச் சொல்வதிலிருந்து அதற்கு முன்பே இலக்கண நூல்பல வழங்கினமை புலனாகின்றது. இவ்வாற்றால், பழந்தமிழ் செந்தமிழாகத் திருத்த முற்றதும் எத்தனையோ பல ஆயிர ஆண்டுகளின் முன்பு என்பது பெறப்படும்.

## கம்பர்தம் பெருமை

இனி, இச்சங்கத்தின் பெயரோடு தொடர்புற்றுள்ள கம்பர் என்னும் புலவர் பெருமானைப்பற்றித் தமிழ்நாட்டில் அறியாதாரிலர். கல்வியிற் பெரியர் என்றும், கவிச் சக்கரவர்த்தி என்றும் யாவரும் அவரைப் பாராட்டுவர். அவரது கவிபாடும் ஆற்றலைக் குறித்துக் "கம்பன்வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என ஒரு பழமொழியும் வழங்கிவருகின்றது. அவரது இத்தகைய பெருமைக்குக் காரணம் அவரியற்றிய இராமாயணம் என்னும் ஒப்பற்ற பெருங் காப்பியமே யாகும். ஆனல், கம்பர் செந்தமிழ்ச் சங்கம் என்பதிலுள்ள செந்தமிழ் என்பது இராமாயணத்தைக் குறிப்பதாகக் கொள்ளுதற்கு இடனின்று. இச்சங்கத்தினர் பொதுவாகத் தமிழ் வளர்ச்சியே கருதி முயன்றுவருதலின், ஈண்டுச் செந்தமிழ் என்பது தமிழ்மொழியையே குறிப்பதாகும். ஆயின், கம்பரது தமிழ் என்று கூறுதற்குரிய இயைபு தான் என்னையெனின், அவர் தமிழ்மொழியைப் பலபடியாகப் பாராட்டி யிருத்தலாலும், தாம் இயற்றிய காப்பியத்தின் மூலமாகத் தமிழன்னைக்கு உலவாப் புகழ்தேடித் தந்து பெருமையெய்தியவ ராகலானும் தமிழைஅவருக்கு உரிமையாக்கிக் கம்பரது தமிழ் என்று கூறுதல் பெரிதும் பொருத்தமுடைத்தேயாம். முடியுடை வேந்தரும் சிவிகை சுமக்குமாறு வாழ்ந்த அவரது பெருமித வாழ்க்கையானது பொதுவாகக் கல்விக்கும், சிறப்பாகத் தமிழ்க்கல்விக்கும் பெருமையளிப்பதொன்றன்றே?

"நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த இல்லாண்மையாக்கிக் கொளல்" என்றார் திருவள்ளுவர். தம் அறிவாலும், ஊக்கத்தாலும் தாம் பிறந்த குடியை உயரச்செய்து அதனை ஆளுதற்குரியரே நல்லாண்மையுடையராவர். பிறந்த குடி என்பது அறிவுடைய பெருமக்களுக்கு அவரவர் அறிவுக்கும், பெருமைக்கும் ஏற்ப ஒரு நாடாகவும், தேசமாகவும் இருக்கும். உலக முழுதுமாகவும் இருக்கும். அவற்றை விளங்கச் செய்தலால் அவர்கள் பெயரால் அவை வழங்குதற்குரியனவேயாம். இத்தேசத்தினைப் பரதகண்டம் என வழங்குவது இதுபற்றியன்றே? இரகுவின் வமிசம், பூருவின் மரபு, குருநாடு என்றிங்ஙனம் வழங்குவனவும் காண்க. அவ்வாறே நாமும் நம் தமிழ்நாட்டைக் கரிகாலன் நாடு, நெடுஞ்செழியன் நாடு, செங்குட்டுவன் நாடு என வழங்குவோமாக; அதனைப்பார்க்கிலும், தொல்காப்பியர் நாடு, திருவள்ளுவர் நாடு, கம்பர் நாடு என்று இங்ஙனம் கூறுதல் சிறப்புடைத்தாம். அங்ஙனமே தமிழையும்

வள்ளுவர் தமிழ், நக்கீரர் தமிழ், கம்பர் தமிழ், சேக்கிழார் தமிழ், சம்பந்தர் தமிழ், சடகோபர் தமிழ் என்று கூறிப்பாராட்டுவோமாக.

இனி, கம்பர் தம் தாய்மொழியாகிய தமிழை எங்ஙனம் பாராட்டியுளாரென்பதை நோக்குங்கள். அவர் அகத்தியனுரைக் குறிக்குமிடங்களில் 'தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்'' என்றும் ''நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்'' என்றும் ''என்றுமுள தென்றமிழியம்பியிசை கொண்டான்'' என்றும் கூறுகின்றார். ''செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்றமிழ்'' என்று தமிழின் இனிமையையும் திருந்தியதன்மையையும் பாராட்டுகின்றார். கோதாவிரியாற்றையும், பம்பைப் பொய்கையையும், இராமாயணத்தையும் வருணிக்குமிடங்களில் செந்தமிழ்ச் சான்றோரியற்றிய கவிதைகளை உவமையாகக் கூறுகின்றார். சீதாபிராட்டியையும் ''செஞ்சொற் கவியின்பம்'' என்று கூறி மகிழ்கின்றார். இவை போல்வனவற்றிலிருந்து, தமிழின் சுவையும், சான்றோர் கவியும் அவருள்ளத்தை எவ்வளவு கொள்ளைகொண்டுவிட்டன என்பது புலனுகின்றது. இப்பொழுதும் பலர் தமிழைப் பாராட்டுகின்றனர். ஆனுல், அவர்கள் தமிழ்நூற்களைக் கற்பதில்லை; அவற்றின் பொருளை அறிவதில்லை; சுவையை நுகர்வதில்லை. தமிழே உயர்ந்தது என்கின்றனர். அங்ஙனம் கூறவேண்டாம் என்பது என் கருத்தன்று. அவ்வளவில் அவர்கள் நின்று விடலாகா தென்றே கூறுகின்றேன். கம்பர் தமிழன்பு அவரைத் கவிச்சக்ரவர்த்தியாக்கிற்று; ஆக்கியபின் அவர் மேலும் மேலும் தமிழன்னை யிடத்து அன்பு பெருகுவாராயினர். தமிழ் நாட்டினிடத்தும் அவருக்குள்ள பற்று அளவிடற் பாலதன்று. கோசலநாட்டைக் கூறும்பொழுது ''காவிரிநாடன்ன கழனி நாடு'' என்றும், கங்கையாற்றைக் கூறும்பொழுது ''தெய்வப் பொன்னியே பொருவுங்கங்கை'' என்றும் உரைப்பன போல்வன அவரது நாட்டின் பற்றை நன்கு விளக்குகின்றன. மற்றும் அவர் இராமாயணத்திற்குச் சிறப்பளிப்பன தமிழ்மக்களின் சீரிய வழக்க வொழுக்கங்களையும், தமிழ் வேந்தர்களின் நீதி முதலியவற்றையும் உள்ளத்திற்கொண்டு, அவற்றிற்கேற்ப இராமாயணத்து வரும் நன் மக்களின் பண்புகளை அமைத்துச் செல்வது போல்வனவாம். மகளிர்க்கு உயிரினும் நாண் சிறந்தது என்றும், நாணினும் கற்புச் சிறந்தது என்றும்தொல்காப்பியம் கூறுகின்றது. அத்தகைய தமிழ் நங்கையரின் உயரிய கற்பொழுக்கத்தைப் பற்றிய உணர்ச்சியால் உந்தப்பெற்றே அவர் எவ்விடத்தும் மாதர்களின் கற்புக்கு இழுக்குண்டாகாவாறு பாதுகாத்தும், பெருமைப்படுத்தியும் கூறிச்செல்கின்றனர். நாகரிக மக்களின் உள்ளப்பான்மையைத் தெள்ளிதின் விளக்குவதில் கம்பர் நிகரற்றவர். இவ்வுலகிலே தனி முடி தரித்தரசாளும் இன்பத்தினும் வானுலகிற் கற்பகக் காவிழலில் எய்தும் இன்பத்தினும், கம்பராமாயணம் கற்பதனுல் எய்தும் இன்பம் பெரிதென ஒருவர் கூறியது சிலருக்கேனும் உண்மையாயிருக்கு மென்பதில் ஐயமில்லை. உலகிலே பல மொழிகளினுமுள்ள உயர்ந்த காப்பியங்களைக் கற்றுணர்ந்த அறிஞர் சிலர் கம்பராமாயணமே சுவையில் பிறவற்றின் விஞ்சி

யுள்ளது எனப் புகன்றுள்ளனர். இவ்வாற்றால், கம்பர் தமது காப்பியத்தால் தமிழுக்குப் பெருமை தந்துளர் என்பதில் இழுக்கென்னை? இங்ஙனம் கூறுவதிலிருந்து கம்பருடைய தத்துவங்கள் எல்லாம் யாவரும் ஒத்துக்கொள்ளக் கூடியன வென்று நான் புகல்வதாக நினைத்தலாகாது. யாதொரு நூலின் கொள்கையும் யாவர்க்கும் முற்றிலும் உடன்பாடாகுமென்று கூறவியலாது. இராம காதையே புனைந்துரையாயினும் ஆகுக. அதன் கோட்பாடுகள் பல பொருத்தமற்றவையாயினும் ஆகுக. ஒன்பான் சுவையும் ஒருங்கு பெய்து வைத்தகொள்கலம் போன்ற கம்பராமாயணத்தைக் கற்றுக் கவிச்சுவையை நுகர்ந்து இன்புறுதலும், அதில் வந்துள்ள நன்மக்களின் பண்புகளையறிந்து பயனெய்துதலும் யாவர்க்கும் கடனாம்.

## உழவு தொழில்

கம்பர் தமக்கு முன்பிருந்த சங்கத்துச் சான்றோர்களிடத்திலும், திருவள்ளுவர் முதலானவர்களிடத்திலும் அளவற்ற அன்பும் மதிப்பும் வைத்துள்ளவர். தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் ஒப்பற்ற தமது திருமறையின் கண் உழவு என்று ஓர் அதிகாரம் வகுத்துள்ளார். அதில் நாட்டிற்கு உழவு தொழிலின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்து அத்தொழிலை மற்றெல்லாத் தொழிலினும் சிறந்தது என்றும், உழவு தொழில் செய்வார் ஏனையோரை யெல்லாம் புரக்கும் ஆற்றலுடையவர்களாக இருத்தலின் பெரு மதிப்பிற்கு உரியவரென்றும் கூறியிருத்தலைக் கற்றோர் யாவரும் அறிவர். கம்பநாடர் திருக்குறளிலுள்ள எத்தனையோ பல பாக்களைத் தமது காப்பியத்தில் எடுத்து அமைத்துப் பாராட்டி யிருப்பதுடன் திருவள்ளுவர் கொள்கையைப் பின்பற்றி உழவின் மேன்மை புலப்பட ஏரெழுபது என்ற ஒரு நூலும் இயற்றினர். சங்கப் புலவர்களும் இத்தொழிலின் மேன்மையை நன்கு அறிந்திருந்தார்கள். சோழ நாட்டிலே ஒரு காலத்தில் சிலர் அரசனுக்கு நிலவரி கொடுக்க முடியாத நிலைமையிலிருந்தனர். அப்பொழுது நிலவுரிமையு முடையரா யிருந்த ஒரு புலவர் அரசனை அணுகி "வேந்தே! நினது குடையானது வெயிலை மறைப்பதற்குக் கொண்டன்று, வருத்தமுற்ற குடிகளின் துன்பத்தை மாற்றுவதற்கு அடையாளமாக எடுத்ததாகும். உன் படை வீரர்கள் மாற்றாரை வென்று உனக்குத் தருகின்ற வெற்றியும் உழுகின்ற கலப்பை சென்ற படைச்சாலின் பக்கத்திலே பயிர்கள் நன்றாக விளைந்ததன் பயனேயாகும். ஆதலால், நீ உழு தொழில் செய்வாருடைய துன்பத்தை நீக்கி அவர்கள் குடியைப் பாதுகாப்பாயாயின் பகைவர்களெல்லாம் நின்னடியின்கீழ் வணங்கி நிற்பர்" என்று கூறினர். அதனால் அவ்வரசன் ஆறில் ஒன்றாகத் தான் வாங்கிக்கொண்டிருந்த நியாயமான வரியையும் அப்போது வாங்காது விட்டுவிட்டான். இங்ஙனம் எத்தனையோ பல சான்றுகள் சொல்லக்கூடும். இதிலிருந்து ஒரு அரசனுடைய அரசியல் நன்கு நடப்பதற்கே உழு தொழில் செய்யும் குடிகள் நலனுடன் வாழ்தல் இன்றியமையாததென்பது பெறப்படும். இக்காலத்தை நோக்குங்கள். நிலத்தின் இலாபத்தில் செம்பாதி அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரியாக விதிக்கப் பெற்

றுளது. உண்மையை ஆராய்ந்தால் இப்பொழுது நிலவரி பாதியள வில் நிற்கவில்லை. குடிகள் வரி கொடுக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். இது குறித்து எவ்வளவு முறையிட்டாலும், அரசாங்கத்தார் செவியில் ஏறுவதில்லை. குடிகள் படுகின்ற இந்தத் துன்பம் அரசியலில் பெரிய குழப்பம் உண்டாவதற்கு ஏதுவாகவும் கூடும் என்பதனை ஆட்சியை நடாத்துபவர்கள் உணர்தல் வேண்டும். தேச ஆட்சியில் பொறுப்புள்ள பதவிகளை வகிக்கும் பெருமக்களெல் லாம் நம் பழ நூல்களைக் கற்றுணர்ந்து அவற்றிற் கேற்ப நடக்க வேண்டுமென்னும் உணர்ச்சி யுடையராகுங் காலமே நாட்டிற்கு நற் காலமாகும்.

## சங்கங்கள்

அன்பர்களே! இதுகாறும் செந்தமிழ் இன்னது என்பதையும், கம்பருக்கும் தமிழுக்கும் உள்ள இயைபினையும், கம்பருடைய பெரு மையையும் ஒருவாறு கூறினேன். இனி, சங்கம் என்பது குறித்துச் சில சொற்கள் சொல்ல விரும்புகின்றேன். பண்டை நாளிலே சமயத் தைப் பரப்புவதற்கும் மொழியை வளர்ப்பதற்கும் சங்கங்களிருந்தன. தமிழை வளர்ப்பதற்கென்று முன்பு மூன்று சங்கங்கள் நடைபெற்ற செய்தியைக் கேட்டிருக்கின்றோம். அதனாலேயே நம் தமிழானது சங்கத் தமிழ் என்றும் வழங்குகிறது. தமிழ்மொழி, பழைய நாளிலே தான் மிக உயரிய நிலையில் இருந்தது. பின்பு காலத்துக்குக் காலம் அதன் பொலிவு சிறிது குறைந்தே வந்தது. பாட்டுக்களின் உண்மைத் தன்மை குறைந்து எல்லாவற்றையும் உயர்வு நவிற்சியாகப் புனைந்து ரைக்கும் பொய்ம்மை மிக்கது. நம் தமிழ் வளம்பெற வேண்டுமானால் இடைக்காலத்தே வேறு சிலரால் நேர்ந்த குறைகளை ஒழித்து, பழம் புலவர்களின் சிறந்த நெறியையே கடைப்பிடித்தல் வேண்டும். அதற் குப் பழைய இலக்கிய இலக்கணங்களின் ஆராய்ச்சி இன்றியமையா தது. சில ஆண்டுகளாக 'வித்துவான்' தேர்வு முதலிய குறித்து 'தொல்காப்பிய'ப் பயிற்சியும் சங்க இலக்கியங்களின் பயிற்சியும் ஏற் பட்டு வருதல் மகிழ்ச்சிக் குரியதேயாகும். எனினும் ஊர்தோறும் சங்கங்கள் நிறுவி, தமிழை வளர்த்தற்கு யாவரும் முயலுதல் வேண்டும். தமிழ் ஆராய்ச்சியைக் குறித்து இரண்டொரு சொற்கள் சொல்ல விரும்புகின்றேன். "காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கண்ணதே" என ஆன்றோர் விதித்துளார். உண்மைப் பொருள் காணவேண்டுமென்பதே ஆராய்ச்சி செய்வாரின் நோக்கமாக இருக்கவேண்டும். அதனோடு, இவ்வாராய்ச்சியால் மக்க ளுக்கு நன்மை விளையுமா தீமை விளையுமா என்றும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். தமிழாராய்ச்சி செய்வோர்கள் தமிழைப் புறம்பழித்தும் தமிழ் மக்களை இழிவுபடுத்தியும் காட்டவேண்டுமென்ற நோக்கத் துடன் ஆராய்ந்தால் அது மிகவும் கொடுமையாகும். நம் முன்னோர் களைப் பற்றியும் மொழியைப் பற்றியும் பெருமிதமான உணர்ச்சி யுண் டாகும்படியாகப் பேசுவதும், எழுதுவதுமே உண்மைத் தமிழன்பர் களின் செய்கையாதல் வேண்டும்.

—'விடுதலை'

# ஆராய்ச்சிப் பகுதி : Research

## சேதுபதிகளும் அவர்களுடைய நாணயங்களும்

[வித்துவசிகாமணி திரு. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை]

(௩௨௯-ம் பக்கத்தொடர்ச்சி)

இலங்கேசுரன் இலங்கைக்குத் திரும்பிய கால முதல் கி. பி. 1604 வரையில் இருந்த சேதுபதிகளின் பெயர் அடங்கிய பட்டி ஒன்றுதான் கிடைத்திருக்கிறது. அவர்களாண்டகாலம் தெரிவதற்கில்லை.

1. ஆதிரகுநாத சேதுபதி
2. ஜயதுங்கரகுநாத சேதுபதி
3. ஆதிவீர ரகுநாத சேதுபதி
4. வரகுண ரகுநாத சேதுபதி
5. குலோத்துங்க சேதுபதி
6. சமரகோலாகல சேதுபதி
7. மார்த்தாண்டன் பரவ சேதுபதி
8. சுந்தரபாண்டிய சேதுபதி
9. காங்கேய ரகுநாத சேதுபதி
10. விஜயமுத்து ராமலிங்க சேதுபதி

சேதுபதிகளால் கோவில்களுக்கு விடப்பட்ட மான்யங்கள், கோவில் திருப்பணி ஆகிய இவை சம்பந்தமான கல்வெட்டுகளினின்று இந்த ஜாப்தா தயாரிக்கப்பட்டது. கல்வெட்டுச் சாசனங்கள் அநேக வருஷங்களில் காணப்படுகின்றன. கி. பி. 1414, 1484, 1500, 1540 வரை மான்யங்கள் விடப்பட்டிருக்கின்றன.

(குறிப்பு:—பார்வையிடப்பட்ட புத்தகங்கள் 1. R. Sevail என்பார் எழுதிய தென்னிந்திய வம்ச வரலாறு. (2) நெல்சன் துரையால் இயற்றப்பட்ட மதுரைநாடு (3) ராஜாராம் எழுதிய இராமநாதபுரம் (Manual, Madura Country) (4) Sevail-ன் பூர்வகாலங் குறித்த அட்டவணை.)

இதனால் மதுரையிலிருந்த முத்துகிருஷ்ணப்ப நாய்க்கர் காலத்தின் இரண்டு தலைமுறைக்குட்பட்ட சரித்திரந்தான் தெரிய வருகிறது. அவர் சேதுபதி ராஜ்யம் ஒழுங்குதவறியிருப்பதை அறிந்து சடைக்கதேவர் உடையார் என்ற

ஒரு மறவத்தலைவரை கி. பி. 1604-ம் ஆண்டில் சேதுபதியாக நியமித்தார். இந்தச் சடைக்கதேவர் உடையார் தான் தற்காலத்தில் ஆண்டுவரும் சேதுபதி வம்சத்தின் மூலபுருஷன். அவருக்குப்பின் தொடர்ந்து ஆண்டவர்களின் பெயர்கள் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | சடைக்கதேவர் உடையார் சேதுபதி | 1604-1621 |
| 2. | குட்டன் சேதுபதி | 1621-1635 |
| 3. | தலவை சேதுபதி | 1635-1645 |
| 4. | ரகுநாத சேதுபதி, திருமலை சேதுபதி | 1645-1670 |
| 5. | ராஜசூரிய சேதுபதி | 1670-1673 |
| 6. | கிழவன் சேதுபதி | 1673-1708 |
| 7. | திருவாடயத்தேவர் | 1708-1723 |
| 8. | தாண்டவத்தேவர் | 1723-1724 |
| 9 | பவானி சங்கரத்தேவர் | 1724-1728 |
| 10. | குமாரமுத்து விஜய ரகுநாத சேதுபதி | 1728-1734 |
| 11. | முத்துக்குமார சேதுபதி | 1734-1747 |
| 12. | ராக்கதேவர் | 1747-1748 |
| 13. | செல்லத்தேவர் | 1748-1760 |
| 14. | முத்துராமலிங்க சேதுபதி | 1760-1794 |
| 15. | ராணிமங்களேசுர நாச்சியார் | 1803-1812 |
| 16. | அண்ணுசாமி சேதுபதி | 1812-1815 |
| 17. | ராணி முத்துவீராயி நாச்சியார் | 1815-1829 |
| 18. | ராமசாமி சேதுபதி | 1829 |
| 19. | ராணிமங்களேசுர நாச்சியார் | 1829-1838 |
| 20. | ராணிதுரைராஜ நாச்சியர் | 1838-1845 |
| 21. | ராணிபர்வத வர்த்தனி நாச்சியார் | 1845-1868 |
| 22. | முத்துராமலிங்க சேதுபதி | 1868-1873 |
| 23. | பாஸ்கர சேதுபதி | 1873-1903 |
| 24. | ராஜராஜேஸ்வர சேதுபதி | 1903 |

இதற்கு முன் சொல்லியிருக்கிறபடி சேதுபதி ராஜ்யம் என்பது தற்போதுள்ள இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய மூன்று சமஸ்தானங்களும் அடங்கியது. ரகுநாதகிழவன் சேதுபதி (1673-1708) மேற்பட்ட தலைவர்களில் பிரசித்தியானவன். பூர்வம் இந்த வம்சத்தாரது வாசஸ்தலமாகிய புகலூரைவிட்டு இராமநாதபுரத்தை ராஜதானியாக்கிக்கொண்டான். அந்நகருக்கு அரணும் கட்டினன். முன்பு கட்டாயத்தால் விட்டுவிட்டு வந்த தஞ்சை ராஜ்யத்தைச் சேதுபதிகள் கொஞ்சங்கொஞ்சமாக ஆக்கிரமித்துக்கொண்டார்கள். அப்பேர்ப்பட்ட ஆக்கிரமிப்பானது

1646-லும், 1677-லும், மன்னார்குடி வரையில் வியாபித்தது. 1725-ல் கிழவன் சேதுபதிக்குப்பின் அவனது சுவீகாரபுத்திரன் விஜயரகுநாதன் பட்டத்துக்கு வருவதை முன்னிட்டு உண்டாகிய உள்நாட்டுச் சண்டைகளால் மறவநாடு மிகவும் பாதிக்கப்பட்டது. பாத்தியமில்லாத ஒருவன் தஞ்சாவூர் அரசன் உதவியால் சேதுபதியானான். திருச்சிராப்பள்ளி நவாப் உண்மையான பாத்தியஸ்தனுக்கு உதவிபுரிந்தான். தஞ்சாவூர் அரசனால் ஆதரிக்கப்பட்டவன் அடிமைகளைக் கொடுமையாக நடத்தினான். சில விஷயங்களில் தஞ்சாவூர் அரசனுக்கும் வருத்தம் ஏற்படும்படியாக நடந்துகொண்டான். ஆதலால் அடிமைகளில் ஒருவன் நியாயமான வார்ஸுடனும், தஞ்சாவூர் அரசனுடனும் சேர்ந்துகொண்டு அவனை வென்றான். வெற்றியடைந்தவர்கள் தங்களுக்குள் ராஜ்யத்தைப் பங்கிட்டுக் கொண்டார்கள். பாம்பன் நதியின் வடக்கிலுள்ள பாகத்தைத் தஞ்சாவூரரசன் தன் நாட்டுடன் சேர்த்துக்கொண்டான். மீதியான பாகத்தைக் கலகம் செய்தவனும் உண்மையான பாத்தியஸ்தனும் பங்கிட்டுக்கொண்டார்கள். அதில் உத்தமமான 5-ல் 2-பாகம் அடிமைக்கும், 5-ல் 3-பாகம் கிரமமான பாத்தியஸ்தனுக்கும் கிடைத்தன. அந்த அடிமை வீரன்தான் தற்போதைய சிவகங்கை சமஸ்தானத்தின் மூல புருஷன். புதுக்கோட்டை ஜமீன் ரகுநாத கிழவன் மனைவியின் சகோதரனுக்கு 1650-ல் கொடுக்கப்பட்டது.

நாணய சம்பந்தமான சரித்திரத்தை நன்கறிவதற்குப் போதுமான வரையில் சேதுபதிகளின் சரித்திரத்தை ஆராய்ந்திருக்கிறோம். அவர்கள் சம்பந்தமான மற்ற விஷயங்கள் இராமநாதபுர சமஸ்தான வித்வான் இராகவய்யங்கார் இயற்றிய "சேதுபதிகளும் தமிழும்", என்ற புத்தகத்தில் காணப்படும். அவைகளை இங்கே மறுமுறை எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. வேறொரு விஷயத்தை இங்கே குறிப்பிடலாம். சேதுபதி மறவர்களைப்பற்றிச் சொல்லியுள்ளபோதே பாண்டிய மறவர்களைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பாண்டிய மறவர்களில் கோட்டை மறவர்கள் என்ற ஒரு வகுப்பினர் முக்கியமானவர்கள். அவர்களைப்பற்றிய பழங்கதை ஒன்றுண்டு:—மீனாக்ஷியம்மையின் அருளால் உக்கிரபாண்டியனோடு ஐந்து மறவர்கள் பிறந்தார்கள் என்றும், அம்மையினிடமிருந்து ஒரு வாள் பெற்றனர் என்றும், உக்கிரபாண்டியன் திக்குவிஜயம் செய்த காலத்தில், அவர்கள் அவனுக்கு உதவிபுரிந்தனர் என்றும் புராணம்

கூறுகிறது. (திருவிளை—மேரு-23) பின்னர் பாண்டிய தேசத்தில் பாதியை அவர்கள் அடைந்தனர்.

நாணயநூல் நாணயங்களையும், பதக்கங்களையும் பற்றிக் கூறும். இந்தியாவில் இக்காலத்தில் உள்ளவைபோல உருவங்கள் பொறித்த நாணயங்கள் இருந்திருக்கவில்லை. பிரபலமான விஷயங்களின் ஞாபகார்த்தமாக முன்னாளில் கட்டடம் கட்டல், வார்சுதார்களுக்குப் பட்டம் கொடுத்தல், ஆபரணங்கள் அளித்தல், கழல்கள் வழங்குதல் முதலியவைகள் இருந்தன. மற்றெல்லாத் தேசங்களில் இருந்ததுபோல பண்டமாற்று மூலம் வியாபாரம் நடந்தேறியது. தற்போதும் சில பட்டணங்களில் பண்டமாற்று அல்லது பரிவர்த்தனை இருந்து வருகிறது. ஓர் ஊரில் வசிக்கும் ஜனங்கள் தங்கள் ஊரின் விளைபொருள்களைக் கொடுத்து மற்ற இடங்களில் விளையும் விளைபொருள்களைப் பெற்றுக்கொள்வது சகஜமாயிருந்தது. வெவ்வேறு தேசங்களின் விளைபொருள்களைக் கொண்டு பண்டமாற்று செய்ய அனுமதிக்கப்பட்டது. இதற்குச் சான்றாகத் திருவிளையாடல் முதலிய புராணங்களில் பண்டமாற்றுகளைக் குறித்த செய்யுட்களிருக்கின்றன.

இந்தியாவில் நாணயங்கள் வெகுகாலத்துக்கு முன்னமேயே உண்டாக்கப்பட்டன. முதல் முதலில் அது வர்த்தக வகுப்பினர்களுக்குள் மட்டும் செலாவணியாக விருந்தது. பொதுஜன உபயோகத்திலில்லை. வியாபாரிகளாலும், அவர்கள் அரசனாலும் ஸ்தாபிக்கப்பட்ட சில வர்த்தக சங்கத்தார் தங்கள் சௌகர்யத்துக்கென்று நாணயங்கள் அடித்து வழங்கினார்கள். சாமான்ய ஜனங்களுடன் செய்யும் வியாபாரத்தில் பண்டமாற்றே நடந்து வந்தது. இந்தக் கர்மபூமியில் ஜனங்களின் தொழில்முறைகள் கல்வி, விவசாயம், கைத்தொழில்கள், வியாபாரங்கள், சித்திரவேலை, சிற்பவேலை முதலியன. பற்பல தேசங்களைப் போலவே இந்தியாவிலும், பணத்துக்குப் பதிலாகச் சரக்குகளையே உபயோகப்படுத்தி வந்தார்கள்.

---

விரைந்து பெறுமின்கள் விரைந்து பெறுமின்கள்

**திருவள்ளுவர் நினைவுமலர் (1935)**

அழகிற் சிறந்தது; படங்கள் நிறைந்தது

பொருள்வள மிகுந்தது

(நம்மிடங் கிடைக்கும்) குறைந்த விலை அணா 9.

# பண்டைத் தமிழிசை ஆராய்ச்சி

[சுவாமி விபுலாநந்தர்]

(4, 5-வது சொற்பொழிவுகள்)

## இசைவரலாறு

காலம் செல்லச் செல்லத் தமிழ்ப் பாணனின் நிலை எவ்வாறு மாறுதலடைந்ததென்பதைக் கவனிக்கலாம். கி.பி. 7-வது நூற்றாண்டில் தமிழ் நாட்டில் அரசியல் துறையில் கலாபிவிருத்தி சம்பந்தமாகவும் புதிய சகாப்தம் ஏற்பட்டது. அக்காலத்தில்தான் சைவப் பெரியார்களான திருஞான சம்பந்தரும், அப்பரும் தோன்றினார்கள். அவர்களது தோற்றம் புதிய சகாப்தம் ஏற்பட்டதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரும் அவரது மனைவியான விறலியாரும் திருஞான சம்பந்தரைச் சந்தித்தனர். அக்காலத்தில் ஞானசம்பந்தரது பக்திரசம் ததும்பும் பண்கள் எல்லோரது மனதையும் உருக்கி வந்ததோடு அவர்களது மனம் சீரிய லட்சியங்களை நாடும்படியும் செய்தது. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரது இசைக்கு மிக்க மதிப்பு ஏற்பட்டிருந்தது. பாணனைப்போல வறுமையுடையவரல்லர் நீலகண்டர்; பெரிய பக்தர்; வறுமையில்லாமலே இருந்தார். ஞானசம்பந்தரும் நீலகண்டரும் ஒருவரை யொருவர் சந்தித்ததிலிருந்து இருவரும் பிரியா நண்பர்களாயினர். ஞானசம்பந்தரது பண்களுக்குத் திருநீலகண்டயாழ்ப்பாணரும் அவரது மனைவியும் ஸ்வரம் சேர்த்து யாழில் பாடுவார்கள். தருமபுரத்தில் யாழில் வாசிக்க முடியாதவாறு திருஞானசம்பந்தர் யாழ்மூறி என்ற பண்ணை இயற்றிய சம்பவமும், திருநீல நக்கர் என்ற பிராமண பக்தர் தீண்டாதவரான திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கும், அவரது மனைவிக்கும் தமது வீட்டிலே பூசை அறையில் இடமளித்த சம்பவமும் சேக்கிழாரின் பெரிய புராணத்தில் விரிவாகவுள்ளன. சைவப் பெரியார்களின் தேவாரப் பண்களும் வைஷ்ணவப் பெரியாரான நம்மாழ்வாரின் திருவாய்மொழியும் இசையபிவிருத்திக்குச் சாதனங்களாக விருந்தன. தமிழ் மொழியிலே இன்று வரையில் அவைகளைவிட மேலாக பக்திரசம் வாய்ந்த பாடல்களில்லை.

1904-வது வருஷத்திலே புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள ஸ்ரீ கந்தசாமி கோவில் மலையில் கண்ட கல்வெட்டுகளைக் கண்டுபிடித்து அந்தக் கல்வெட்டுகளில் கண்ட விஷயங்களை ராவ்பகதூர் பி. ஆர். பந்தர்கார் பிரசுரித்துள்ளார். 7-வது நூற்றாண்டின் இசையைப் பொறுத்த வரையில் அந்தக்கல்வெட்டுகளை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். அந்தக் கல்வெட்டுகளில் 7 பகுதிகள் உண்டு. அந்தக் கல்வெட்டுகள் தேவநகரி எழுத்துகளிலுள்ளன. அவைகளின் அடியில் தமிழில் 'எட்டுக்கும் ஏழுக்கும் இவை உரிய' என்று கண்டிருக்கிறது. இவ்விஷயங்கள் ஆராய்ச்சிக்குரியனவாகும்.

9-வது நூற்றாண்டிலே பக்திமான்களான இரு பாணர்கள் தோன்றினார்கள். அவர்களில் ஒருவரான பாணபத்திரனார் என்பவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேரமான் பெருமானும் இருந்த காலத்திலிருந்தவர். மற்றொருவர் திருப்பாணாழ்வார்.

பெருங்கதையும், சீவகசிந்தாமணியும் 10-வது நூற்றாண்டைச் சேர்ந்தவை. யாழ் வாசிப்பதுபற்றி அவ்விரு நூல்களும் குறிப்பிடுகின்றன. கதாநாயகன் கதாநாயகிக்கு இசைசொல்லிக்கொடுப்பதும் இருவருக்கும் இசைப்போட்டி நடப்பதும் வழக்கமென்று அவ்விரு நூல்களும் குறிப்பிடுகின்றன.

13-வது நூற்றாண்டிலே சாரங்கதேவர் சங்கீத ரத்னாகரத்தில் தமிழ்த் தேவாரப் பண்களைப் பற்றிச் சில இடங்களில் குறிப்பிட்டிருக்கின்றார். அவ்விஷயங்களை உதவியாகக்கொண்டு தேவாரப் பண்களை நிச்சயிக்கக் கூடும். தேவார ராகங்கள் பல தற்போது மறைந்து விட்டன.

17-வது, 18-வது நூற்றாண்டுகளிலே தஞ்சையில் அரசாண்ட நாயக்க மன்னர்களும், மகாராஷ்டிர மன்னர்களும் சங்கீதத்தை ஆதரிக்க ஆரம்பித்தனர். அப்பொழுது புராதனத் தமிழிசை முற்றிலும் மறைந்தது அதற்குப்பதிலாக புதியமுறை தோன்றியது. வேங்கடமஹியின் 'சதுர்தண்டி பிரகாசிகை' (1660) தோன்றியது முதல் சங்கீத முறையில் புதிய சகாப்தம் ஏற்பட்டது. அது இன்றைக்கும் மாறவில்லை. ஷாஜி (1687-1711) சங்கீத அபிவிருத்தியை ஆதரித்தார். அவரும் ஒரு சங்கீத வித்வானே. அவரது ராஜ சபையில் திருவாரூர் கிரிராஜ கவியும் ஒரு சங்கீத வித்வானாவார். கிரிராஜ கவியின் பேரனே திருவையாறு தியாகராஜசுவாமிகள். பிறகு (1763—1787) அருணாசலக் கவிராயர் ராமாயண கீர்த்தனம் பாடினார். அதன்பின் எட்டியாபுரம் சமஸ்தானத்தைச் சார்ந்த முத்துசாமி தீக்ஷிதர் (1775) திருவாரூர் சாமசாஸ்திரியார் இவர்கள் தோன்றினார்கள்.

தற்போது சங்கீதத்தில் ஜனங்களுக்கு விசேஷசிரத்தை ஏற்பட்டுள்ளது. தற்காலத்தவர்கள் சுயமாக சங்கீத அபிவிருத்தி வேலை செய்வார்களென்றும், புதிய முறைகளை சிருஷ்டி செய்து சங்கீதத்தை ஜீவசக்தியுடையதாக்குவார்களென்றும் நம்புவோமாக.

## சிற்பக்கலைகள்

சங்க நூல்களிலும் இதர பழைய நூல்களிலும் அரண்மனை, ஆலயங்கள், மாளிகைகள், நந்தவனங்கள், நாடக மேடை முதலியவற்றின் வர்ணனை உள்ளது. நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்றவை இலக்கியம் மட்டுமன்று; அழகிய ஆலயங்களில் செதுக்கியுள்ள தெய்வச் சிலைகள், சித்திரங்கள் முதலியனவாகும். தமிழ்ச் சிற்பக்கலை வல்லுநர்கள், சித்திரக் கலை வல்லுநர்கள் இவர்களது திறமை மறைந்துபோய் விடவில்லை. அதனைத் தற்போதும் தமிழ் நாட்டிலும்

இலங்கையிலு முள்ள கோயில்கள் முதலியவற்றில் காணலாம். சங்க நூல்கள் முதலியவற்றில் காணும் புராதனத் தமிழ்நகரங்களின் வருணனையை ஆதாரமாகக்கொண்டு அந்நகரங்கள் எவ்வாறிருந்தன வென்பதை ஒருவாறு யூகிக்கலாம்.

சோழ மன்னரது தலைநகரமான காவிரிப்பூம் பட்டினத்தின் வருணனையை மணிமேகலையில் காணலாம். பௌர்ணமி தினத்தில் அந்நகர் எப்படியிருந்த தென்பதை அந்நூல் கூறுகிறது. அந்நகரை ஒரு அழகிய பெண்ணுக்கு ஒத்திட்டும், நகரின் நடுவிலுள்ள அரசன் மாளிகையை அப் பெண்ணின் முகத்திற்கும், நகரின் இரு கோடிகளிலு முள்ள கற்பக விருக்ஷக் கோட்டத்தையும் வச்ராயுதக் கோட்டத்தையும் அப்பெண்ணின் ஸ்தனங்களுக்கும், கீழ்த்திசையில் எழுந்திருக்கும் சந்திரனையும், மேற்றிசையில் மறையும் சூரியனையும் அப்பெண்ணின் காதணிகளுக்கும் ஒத்திட்டுக் கூறியுள்ளனர். அரசனது அரண்மனை நகரின் நடுவிலிருக்குமென்பது இதிலிருந்து தெரிகிறது. எல்லைகளில் மதில்களிருக்கு மென்பது காஞ்சிநகர் வருணனையிலிருந்துபுலப்படும்.

சிற்பக்கலை சம்பந்தப்பட்ட வரையில் நாம் எதனையும் இழந்து விடவில்லை. கோபுரமானது பிற்கால சிருஷ்டியன்று ஆரம்ப காலத்தி லிருந்தே கோபுரமானது அமைக்கப்பெற்று வந்ததென்பதற்கும் அது நீளமான தென்பதற்கும், வாசல்கள் விசாலமானவை யென்பதற்கும் பலஆதாரங்கள் இருக்கின்றன. புராதன நகரில் அரசர், மந்திரிகள், பார்ப்பனர், நெசவுகாரர், பொற்கொல்லர், தையல்காரர் முதலியவர்களுக்குத் தனித்தனியாக வீதிகளிருந்தன. நகரில் ஸ்நான மண்டபங்களும் சோலைகளும் இருந்தன. அயல் நாட்டினர் வாசம் செய்து வந்த துறைமுகப் பட்டினங்களும் இருந்தன. நகரிலே பலவித ஆலயங்கள் இருந்திருக்கின்றன. இருபுறங்களிலும் யானைகளுடன் லட்சுமி சிலை அமைப்பதோ, சித்திரப் படம் எழுதுவதோ நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. உயரமான கட்டிடங்களே அமைத்து வந்திருகின்றனர். உயரிய நோக்கமுடையவர்க ளென்பதற்கு அது அத்தாட்சியாகும். மூன்றடுக்கு மாளிகை கட்டியுள்ளனரென்பதற்கும் சிலப்பதிகாரத்திலேயே ஆதாரமிருக்கிறது.

அக்காலத்திலே சிற்பிகளுக்கும் ஓவியக்காரர்களுக்கும் மிக்க மதிப்பு ஏற்பட்டிருந்தது. அவர்கள் சிலைகளை மண்ணேடியைந்த மரத்தால் அமைத்தனர். கீர்த்தியுடையவர்கள் இறந்தபின் அவர்களைப் போல் உருவச் சிலைகள் அமைத்தனர்.

அரங்கேற்று காதையில் நாடகமேடையின் வருணனையைக் காணலாம். அம்மேடையின் நான்கு பக்கங்களிலும் தேவதைகளின் உருவப்படங்களை எழுதி வந்தனர்.

புராதன சிற்பிகளும், சித்திரக்கலை வல்லுநரும் தங்களது தொழிலின் ரகசியங்களை வெளியிடுவதில்லை. தங்களது சந்ததியாருக்குப் போதித்து வந்தனர். சிவாகமங்களில் பல நகர அமைப்பு, கோயில் அமைப்பு முதலிய விஷயங்களையே குறிக்கின்றன. அக்காலத்து சிற்பி

கள் சாமான்யரல்லர்; புலமை வாய்ந்தவர்கள்; அனுபூதிபெறத் தகுதியுடையவராக விளங்கினர் தங்களது கலையின் மேம்பாட்டிற்காகச் சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்தனர். உபாசனை செய்தே எந்த தெய்வத்தின் உருவத்தையும் அமைத்தனர். அவ்விதம் நன்ருக அமைந்த உருவத்தில் தெய்வம் குடிகொள்வது வழக்கமாய்ப் பளிங்கு மாடம் அமைத்துள்ளன ரென்பதற்கு மணிமேகலையில் அத்தாட்சி இருக்கிறது. விக்ரகங்களைக் கற்களிலேயே செதுக்கி வந்தனரென்றும் தெரிகிறது. ஒருவன் தான் காதலிக்கும் பெண்ணைப்பெற முடியாவிட்டால் தனது துயரினை ஊராருக்குத் தெரிவித்து அப்பெண்ணை மணக்க மடல் ஏறுதல் வழக்கம். அவ்வாலிபன் தனது கையில் தான் காதலிக்கும் பெண்ணின் உருவத்தை வைத்திருப்பான். இதிலிருந்து பண்டைக்காலத்தில் சித்திரக் கலையும் சிறப்படைந்திருந்த தென்பது விளங்கும். முகாம் அமைக்கத் துணியை உபயோகிப்பது புராதனத் தமிழ் வழக்கம். தமிழர் போரிடுவதில் ஆர்வ மிக்கவராக விருந்தபோதிலும் அவர்கள் கலாபிவிருத்தியிலும், சௌகரியங்களைச் செய்து கொள்வதிலும் விருப்புடையவராக விளங்கினர்.

—'விடுதலை'

---

# வேண்டுகோள்

சருவரிச் சந்திரகலைக்கு வளைத்திருக்கும்
புள்ளில்வளை தமிழோர்கொண்ட
வெருவரிச் சந்திரகலைக்கு வளைத்திருக்கு
மையன்சகனூர் மேவுசீர்போற்
றருவரிச் சந்திரகலைக்கு வளைத்திருக்குக்
கனியெனச்செய் தாளாசங்க
திருவரிச் சந்திரகலைக்கு வளைத்திருக்கு
மரியொடணை செங்கண்மாலே.

—காவடிச்சிந்து பாடிய அண்ணுமலை ரெட்டியார்

இச்செய்யுளுக்குப் பொருள்காண்போர் பொதுநலம் விரும்பி இச்செல்வியில் வெளியிட வேண்டுகிறோம்.

—(பொதுநலம் விரும்பி)




## சிவஞானபோதக் கருத்து

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், B. A.]

பதிப்புரிமை ஆக்கியோர்க்குரியது.

(சிலம்பு-௧௪ பரல்-௮ : ௩௮௬-வது பக்கத்தொடர்ச்சி)

### ஐந்தாஞ் சூத்திரம், இரண்டாம் அதிகரணம்.

11. மேலே முதலாவது அதிகரணத்தில் ஐம்பொறிகள் ஆன்மாவினால் விடயங்களை அறியும் என்ற உண்மையைக் கூறி, சாங்கியர் கொள்கையை மறுத்து நிலைநாட்டிய ஆசிரியர், அவ்வுண்மையை உவமையாகவுங்கொண்டு ஆன்மாவும் முதல்வனாலே விடயங்களை அறிந்து நுகரும் என்ற உண்மையை இரண்டாவது அதிகரணத்திற் கூறி நிலைநாட்டுதற்கு ஈசுரவிகாரவாதி முதலியோர் கொள்கையை மறுத்துக் கூறுகின்றார். இதனாலே அதிகரண இயைபு விளங்கும்.

12. இரண்டாவது அதிகரணத்தின் மேற்கோள் "இனி இதுவும் தமது முதலாலே உணரும்" என்பது. இனி என்பது முதல் அதிகரணங்கூறப்பட்டபின், இரண்டாம் அதிகரணங் கூறுதலைக் குறிக்கும். இது என்னும் சுட்டுப்பெயர் முதலாவது அதிகரணத்திற் கூறப்பட்ட ஆன்மாவைக் குறிக்கிறது. அது சாதியொருமையாய் ஆன்மாக்களை எல்லாங் குறிக்கும். 'உம்' என்பது அறிவுப்பொருளாயுள்ள ஆன்மாவும் என்ற சிறப்புக் குறித்துநின்றது. முதல் என்பது முதல்வனாகிய இறைவன். முதல் என்ற சொல்லானது ஆன்மாவின் அறிவு வேட்கை (இச்சை) செயல்கள் நிகழ்தல் இறைவனுடைய அறிவு வேட்கை செயல்களை இன்றி யமையாதென்றதைக் குறிப்பாலுணர்த்துகின்றது. "என் வாழ்முதலாகிய பொருளே" என்று மாணிக்கவாசக அடிகள் திருவாசகம் திருப்பள்ளியெழுச்சி முதற்பாட்டில் இறைவனை விளித்தல் காண்க. உணரும் என்பது சத்த பரிச ரூப ரச கந்தங்களாகிய உலக விடயங்களை அறிந்து நுகரும் என்றபடி. இந்த அதிகரணத்தின் மேற்கோளை உவமைப் பொருளோடு சேர்த்துக்கூறின், ஐம்பொறி

கள் ஆன்மாவினால் விடயங்களை அறிந்து நுகர்தல்போல அறிவுப்பொருளாயுள்ள ஆன்மாவும் தன்னுடனின்றறிவிக்கிற முதல்வனால் சத்த பரிச ரூப ரச கந்தங்களாகிய உலக விடயங்களை அறிந்து நுகரும் என விரியும்.

13. ஈசுவராவிகாரவாதி முதலியோர் அடியில் வருமாறு தங்கள் கொள்கையைக் கூறுகின்றார்:—ஐம்பொறிகள் அறிவில்லாத சடப்பொருள்களாதலின் அவை ஒரு விடயத்தையும் அறியா என்பது நாங்கள் ஒப்புக்கொள்ளத் தக்கதாகப் பொருந்தும். ஆன்மா அறிவுப்பொருளாகலின் விளக்கொடு கூடிய கண் "பொருள்களைக் காணுதல்போல, ஐம்பொறிகள் முதலிய கருவிகளைக் கூடியபொழுது விடயங்களை அறிந்து நுகரும்" என்பது பொருந்தும். அவ்வாறின்றி, ஆன்மா தன்னுடனின் றறிவிக்கும் முதல்வனால் விடயங்களை அறிந்து நுகரும் என்பது பொருந்தாது. மேலும் ஆன்மா, தான் விடயங்களை அறிந்து நுகருமிடத்து முதல்வனது உதவியை அவாவிநிற்குமென்னில், முதல்வனும் அவ்வாறே தனக்கு மேலான பிறிதொரு பொருளினுதவியை அவாவுமெனப்பட்டு மேலும் வரம்பின்றியோடும்.

14. ஈசுரவவிகாரவாதி முதலியோர் கூறிய தடைஉரையைக்கேட்ட ஆசிரியர் ஒரேதுக்கூறி அதனை மறுத்துத் தமது மேற்கோளைச் சாதித்து வலியுறுத்துகின்றார்.

15. "இவ்வான்மா தன்னாலேயுணரு மிந்திரியங்களைப் போலத் தானும் தன்னையுணராது நிற்றலான்" என்பது அந்த ஏது. இவ்வான்மா என்பது சாதியொருமைப் பெயராய் எல்லா ஆன்மாக்களையுங் குறிக்கிறது. உணரும் என்பது விடயிக்கும். இந்திரியங்கள் என்பது ஐம்பொறிகள். தன்னை என்ற சொல்லை இரட்டுற மொழிதல் என்னு முத்தியால் தன்னை என்றும், அதாவது, ஆன்மாக்களை என்றும், தன் ஐ (முதல்வன்) என்றும், அதாவது, ஆன்மாக்களுடைய முதல்வனையும் என்றும் உரைத்துப் பொருள்கொள்க. உணராது என்பது அறியாது. விடயங்களை விடயித்தற்கண் ஐம்பொறிகள் தம்மையும் தம்மைச் செலுத்தி நிற்கும் ஆன்மாவையும் அறியாதிருத்தல்போல, ஆன்மாக்களும் தம்மையும் தம்முடனின்றறிவித்து நிற்கும் முதல்வனையும் அறியமாட்டா என்பது ஏதுவினாற் போந்தபொருள். ஐம்பொறிகளும் ஆன்மாக்களும் முறையே உயிரில்லாத சடப்பொருள்கள், அறிவுப்பொருள்கள் என்பனபற்றி வேறுபாடுடையவாயினும் தம்மையும் தமது முதலையும் அறியமாட்டாமைக்கண் ஒக்கும் ஆகலின்,

ஆன்மாக்கள் தமது முதல்வன் உடனின்றறிவிக்க விடயங்களை யறிந்து நுகரும் என்பது கருத்து. இந்த ஒற்றுமைபற்றி முதல் அதிகரணத்தில் எவ்வாறு, ஐம்பொறிகள் முதலிய கருவிகள், ஆன்மா சம்பந்தமாகச் சாங்கியர் கொள்கை மறுக்கப்பட்டு ஐம்பொறிகள் முதலிய கருவிகள் தம்முடன் ஆன்மா ஒற்றித்துக் காணினல்லாது ஒன்றையும் விடயியா என்ற உண்மை வலியுறுத்தப்படுகின்றதோ, அவ்வாறே, இரண்டாம் அதிகரணத்தில் ஆன்மா முதல்வன் சம்பந்தமாக ஈசுரவவிகாரவாதிகள் முதலாயினோருடைய கொள்கை மறுக்கப்பட்டு ஆன்மாக்கள் தம்முடன் முதல்வன் ஒற்றித்து நின்று காணினல்லது ஒன்றையும் அறிந்து விடயியா என்ற உண்மை வலியுறுத்தப்படுகின்றது. முதல்வன் அநாதிமுத்தத் தனி முதற்பொருள் என்பது மேலைய சூத்திரங்களிற் கூறப்பட்டது. அவன் தனக்கு மேலாயும் ஒப்பாயும் ஒரு பொருளையுமுடையவனல்லன். ஐம்பொறிகள் முதலிய தத்துவங்களுக்கும் ஆன்மாக்களுக்கும் மேலாக முதலுண்டேயன்றி முதல்வனுக்கு முதலில்லை. ஆதலின் முதல்வனும் தனக்குமேல் பிறிதொரு பொருளினுதவியை அவாவி நிற்கும் என்று நீ கூறியது பொருந்தாது என அறிக.''

16. ஆசிரியர் கூறிய மறுப்புரையைக் கேட்ட ஈசுரவவிகாரவாதி மற்றுமோர் தடைஉரை கூறுகின்றான்:-ஆன்மாக்கள் விடயங்களை நுகர்தற்கண் முதல்வன் ஆன்மாக்களுடனின்று அறிவிப்பன் என்னில் ஆன்மாக்கள் இன்பதுன்பங்கள் நுகர்ந்து விகாரமடைதல்போல் முதல்வனும் இன்பதுன்பங்கள் நுகர்ந்து விகாரமடைவன் எனப்பட்டு வழுவாம்.

17. ஈசுரவவிகாரவாதி கூறிய தடை உரையைக்கேட்ட ஆசிரியர் மறுபடியும் கூறுகின்றார்:—ஞாயிற்றின் சந்நிதியில் தாமரைப்பூ மலர்தலும் வாடுதலும் நிகழ்கின்றன. அது போல முதல்வன் சந்நிதியில் உயிர்கள் சேட்டித்துத் தங்கள் அறிவு வேட்கை செயல்களை நிகழ்த்தி விடயங்களை நுகருகின்றன. சந்நிதி என்பது இங்கே ஈசுரவவிகாரவாதி கூறும் அபிமுகம் (Presence) அன்று, சிவசத்தி அவ்வக்காரியங்களினுன்முகமாதலாகிய சங்கற்பமே சந்நிதி என்ற சொல்லின் பொருள். ஞாயிற்றின் சந்நிதியில் தாமரை மலர் மலர்தலாலும் வாடுதலாலும் ஞாயிறு யாதொரு விகாரமுமடையாதது போல முதல்வன் சந்நிதியில் உயிர்கள் சேட்டித்து அறிவு வேட்கை செயல்களை நிகழ்த்தி, விடயங்களை நுகருதலால் முதல்வன் யாதொரு விகாரமு மடைவானல்லன். இவ்வுண்மை ஆகமங்களிற் கூறப்பட்டுள்ளது. ஐம்பொறிகள் தாம் ஆன்மா

வோடு ஒற்றித்துக் காணினல்லது ஒன்றையும் விடயியா என்ற உவமையில் ஒற்றித்துக் காணுதலால் வரும் அறிதற்பயன் ஆன்மாவுக்கன்றி சடப்பொருள்களாகிய ஐம்பொறிகளுக் கில்லை. ஆன்மாக்கள், முதல்வன் தம்முடன் ஒற்றித்துக் காணினல்லது ஒன்றையும் விடயியா என்ற உவமேயத்தில் ஒற்றித்துக்காணுதலால் வரும் இன்பதுன்பப்பயன் ஆன்மாக் களுக்கன்றி முதல்வனுக்கில்லை. இவ்வேறுபாட்டை நீ அறிவாயாக. உயிர்கள் தம்மோடுடனாய் நின்று முதல்வன் கண்ணுக்கு விளக்குப்போல காட்டாகி நிற்ப, தாம் செய்த வினைக்கு ஏற்ப விடயங்களை அறிந்து நுகரும். அங்ஙனம் உயிர்கள் விடயங்களாலாகும் இன்பதுன்பங்களை நுகருங்கால் முதல்வன் தன்முன் அசத்தாகிய உலகம் விளங்கித்தோன்றுது; ஆதலின் அவ்வின்ப துன்பங்களை அநுபவியான்.

18. மேலே முதல்வன் சந்நிதியில் உயிர்கள் சேட்டித்துத் தாம் செய்த வினைக்கேற்ப விடயங்களை அறிந்து இன்பதுன்பங்களை அநுபவிக்கும் என்றதால் முதல்வன் உயிர்களோடும் உடனின்றறிந்து விடயங்களை நுகரில் விகாரமடைவன் என்னும் ஈசுரவவிகாரவாதி கொள்கையும்; உயிர்களுக்குக் கன்மமே பலன் கொடுக்கும், முதல்வன் வேண்டாம் என்னும் பூர்வமீமாம்சகர் கொள்கையும்; முதல்வனே எல்லா உயிர்களுக்கும் உடனின்று அறிவிப்பானேல் எல்லா உயிர்களுடைய அறிவுகளும் ஒருதன்மையவாக ஒத்திருக்க வேண்டுமென்பார் கொள்கையும் மறுக்கப்பட்டன.

(தொடரும்)

---

மேன்மை உடையதாகிய வாணிக முயற்சியைச் செய்யப் புகுவோர் எல்லாரிடத்தும் அன்பும் இரக்கமும் உடையவர்களாயும், மக்களுக்கு வேண்டிய பல பண்டங்களின் வகையும் அவை உண்டாகும் இடங்களின் வரலாறுந் தெரிந்து அவற்றைக் குறைந்த செலவில் வருவித்து எல்லார்க்கும் நயமாக ஒரே விலை கூறி முகமலர்ந்து இனியசொற் பேசி விற்கும் அறிவுந், திறமானசெய்கையும் வாய்ந்தவர்களாயும் இருத்தல் வேண்டும்.

—மறைமலையடிகள்.




# குறுந்தொகை

[திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியார் B. A., B. L, L. T.]

## பாலை

வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேவுன சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே. எ

—பெரும்பதுமனார்.

## PALAI

7. They alone are hero's anklets which are borne on the ankles of this archer! They alone are real *chilambu* (women's leg ormanents) which are worn on the soft feet of this lady whose arms are adorned with gold bracelets! Who are these beautiful people? The wind beats rough like the rope-dancer's drum; much shaken, the dry white pods on the *vagai* (rain-tree) keep sounding. These are to be pitied who at such a season seek to go across the close-grown bamboo-jungle.

**Perum-Padumanar**

## மருதம்

கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவின் செய்யுந்தன் புதல்வன் றாய்க்கே. அ

—ஆலங்குடி வங்கனார்.

## MARUTHAM

8. The Lord of the fertile land, where the fruit fallen from the tree growing on the edge of the field is caught up by the carp that lives in the water adjoining, spoke great words of promise to come back to me; but the moment he saw his wife and child, he has become unto them, a veritable puppet dancing to any tune they please.

**Alangudi Vanganar**

## நெய்தல்

யாயா கியளோ மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணாணிக் காப்பா டும்மே. ௯

—கயமனார்.

## NEYDAL

9. She who by her chastity has been as a mother unto all, she whose soft body has been of mauve colour, has like an unworn flower shut fast in an air-tight casket, languished: what shall we say of the cruel absence of her Lord, Lord of the coast where the shining green-leaved, stout-stemmed blue-lily resembles the eyes of women who bathe in the tank as often as the water rises and the fish abound? Ashamed of him, we shall observe silence.

**Kayamanar**

## மருதம்

யாயா கியளே விழவுமுத லாட்டி
பயறுபோ லிணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலி னாணிய வருமே. ௰

—ஓரம்போகியார்.

## MARUTHAM

10. She who by her chastity is as a mother unto all, she who by marriage rites is the chief lady of the house, never disclosed the cruel absence of her Lord, the lord of the land abounding in *Kanji* trees, whose tender boughs bowed down by ploughmen, scatter on them, from fragrant flowers, soft pollen, green as the green gram. I think he will come to-day to falsify my fears.

**Oram-pogiar**

## பாலை

கோடீ ரிலங்குவளை நெகிழ நாளும்
பாடில கலுழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கிவ ணுறைதலு முயங்குவ மாங்கே
எழுவினி வாழி னெஞ்சே முனாஅது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
வல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேத்தா ராயினும்
வழிபடல் சூழ்ந்திசி னவருடை நட்பே. கக

—மாமூலனார்.

## PALAI

11. The spotless white and radiant conch-cut bracelets slip and fall; the eyes sleepless suffer from weeping. Rather than live here, we shall settle there; where in front of us, we see the battle-field of the Telugus who wear a coronal of *kullai* flowers; their land abounding in *acacia* trees is better: though the language of the land be different, rise, let us go forth and seek their friendship and prosper.

**Ma-mula-nar**

எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல் லன்ன பாறை யேறிக்
கொடுவி லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தென்பவவர் தேர்சென்ற வாறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமலற் கழறுமிவ் வழுங்க லூரே. கஉ

—ஓதலாந்தையார்.

12. Many are the springs small as the ant-holes; like to the anvil is the rock, ascending whereon the foresters shoot at wayfarers. Many-branched are the roads; (it is easy to lose one's way and come to harm) that way my Lord's chariot went. This wretched town, not anxious for him, is worried about a multitude of other things.

**Othal-anthai--yar.**

## குறிஞ்சி

மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகற்
பைத லொருதலை சேக்கு நாடன்
நோய்தந் தனனே தோழி
பசலை யார்ந்தநங் குவளையங் கண்ணே.

௧௩

—கபிலர்.

## KURINJI

13. Clean-washed like an elephant are the rough rocks after a heavy rain. My Lord, abiding on one side of them causes terror all over. He gives me the pain of separation, O, companion mine, and my eyes, beautiful as the blue lotus, are now filmed over.

**Kapilar**

அமிழ்துபொதி செந்நா வஞ்ச வந்த
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப்
பெறுகதில் லம்ம யானே பெற்றாங்
கறிகதில் லம்மவிவ் வூரே மறுகில்
நல்லோள் கணவ னிவனெனப்
பல்லோர் கூறயாஅ நாணுகஞ் சிறிதே.

௧௪

—தோல்கபிலர்.

14. O Lady, with the tongue packed with nectar, let me with your help get that maid with the regular row of teeth and few words! After I get her, let all the city know it. I am averse to doing that which will make all the passers by say with pity, how richly this youth deserves her!

**Tholkapilar**

(This has reference to the old time practice of a rejected lover mounting a horse of palmyra-fronds in front of the loved one's house, to excite the pity and evoke the interest of passers-by on his behalf.)

# அறிவியற் பகுதி - Science

## தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்

[திரு. பா வே மாணிக்கநாயக்கர்—க. ப. சந்தோஷம் B. A. L T.]

(௩௪௨-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்வரும் நான்காவது படத்தில் ஐந்து அகர எழுத்துக்க
ளிருக்கின்றன. இவை பல்வேறு பகுதிகளாக வகுக்கப் பட்
டிருக்கின்றன. முதலில் வருகின்ற அகரவெழுத்து அ, உ, ம
என்று குறிப்பிடப்பெற்ற மூன்று பகுதிகளாயுளது. அதற்
கடுத்த அகரம் 1. என்ற எண்ணால் குறிக்கப்பட்டுப் பகுக்கப்
படாது நிற்கின்றது. அடுத்தது 2, 3 என்ற எண்களால்
குறிக்கப்படுகின்ற இரண்டு பகுதிகளை உடையதாயுளது. நான்
காவதாகிய அகரம் 4, 5, 6 என்ற எண்களால் காட்டப்படும்
மூன்று பிரிவுகளையுடையது. இறுதியிலுள்ள அகரம் 7, 8, 9,
10 எனும் எண்கள் கொண்ட நான்கு பிரிவுகளையுடையதாய்
நிற்கின்றது. இங்ஙனம் பெறப்பட்ட பகுதிகளை எடுத்து வேறு
வகையில் புணர்த்துவதால் (ஓ, ந, ம, சி, வ, ய என்ற) மூல
மந்திரம் தோன்றுகின்றது. அ, உ, ம என்ற எழுத்துக்களால்
குறிக்கப்படும் முதல் அகரத்தின் மூன்று பகுதிகளும், மந்திரத்
திலுள்ள ஓகரத்தைத் தோற்றுவிக்கின்றன. மிகுந்த நான்கு
அகரங்களும் பற்பல வகையில் பத்துப்பிரிவுகளாய் நின்று பஞ்
சாக்ஷரம் அல்லது ஐந்து எழுத்தாகிய 'ந, ம, சி, வ, ய,'
என்ற எழுத்துக்களைத் தோற்றுவிக்கின்றன. ந, ம, சி, வ,
ய என்ற எழுத்துக்கள் ஐந்து, சிவனுடைய முகங்கள்
ஐந்து; இவ்வைந்தெழுத்துக்களும் பத்துப் பிரிவுகளா
லாயவை; சிவனுடைய கரங்கள் பத்தாம்; இவ்வொற்றுமை
கருதற்பாலது. ஐந்து அகரவெழுத்துக்களை எடுத்து இவற்
றைப் பகுதிகளாக வகுத்து ந, ம, சி, வ, ய என்ற ஐந்
தெழுத்துக்களைப் பெறுகின்றோம். இங்ஙனமாயினும், பிர
ணவமாகிய ஓகரவெழுத்து இவற்றிலமையாது அதிகப்பட்டு
நிற்கின்றது. இஃது ஈஸ்வரனின் மாறுத நிலையைக் குறிக்கும்,
ந, ம, சி, வ, ய என்ற எழுத்துக்கள் சிவனுடைய ஐந்
தொழில்களாகிய சிருஷ்டி, திதி, சங்காரம், த்ரோபவம்,
அநுக்ரகம் என்பவற்றின் குறியீடுகளாம். ந, ம, சி, வ, ய
என்ற எழுத்துக்களின் தத்துவம் அல்லது உண்மை இயல்,



படம் 4.



படம் 5.

முதலெழுத்தாகிய ஓகரம் அல்லது அகரத்தின் எவ்வெப் பகுதியிலிருந்து இவ்வெழுத்துக்கள் ஆக்கப்படுகின்றன வென்பதை நன்கு நோக்குவதால் தெளியப்படும். இதைக் கூறப்புகின், எடுத்துக்கொண்ட பொருள் இடர்ப்படுமாறு நீண்ட சொற்பொழிவொன்றுற்ற வேண்டுமாதலின், இதை விடுத்து மற்றொரு மூலமந்திரத்தை எடுத்துக்கொள்கின்றேன்.

ஐந்தாவது படத்தின் மேற்பகுதியில் வெவ்வேறு பிரிவுகளையுடையனவாய் ஐந்து அகர வெழுத்துக்களிருக்கின்றன. முதல் அகரவெழுத்து, அ, உ, ம என்ற குறிகளையுடைய மூன்று பகுதிகளாலாயது. மிகுந்த நான்கு அகரவெழுத்துக்களும், பன்னிரண்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றுமுதற் பன்னிரண்டுவரையிலுள்ள எண்களால் இப்பிரிவுகள் குறிப்பிடப் பெற்றிருக்கின்றன. தலைப்பிலுள்ள அகரத்தின் மூன்று பிரிவுகளுந் திருப்பியடுக்கப் பட்டு முளையெழுத்தாகிய ஓகரத்தின் வடிவம் பெறுகின்றன. எஞ்சிய நான்கு அகரவெழுத்துக்களின் பன்னிரண்டு பகுதிகளும் ஷடாக்ஷரமாகிய "சரவணபவ" என்ற மூலமந்திரத்தின் எழுத்துக்களைத் தோற்றுவிக்கின்றன. "சரவணபவ" என்பதிலுள்ள எழுத்துக்கள் ஆறு; முருகனின் முகங்கள் ஆறு; "சரவணபவ" என்பதிலுள்ள ஆறுஎழுத்துக்களும் பன்னிரண்டு பிரிவுகளாக பகுக்கப்பட்ட நான்கு அகரவெழுத்துக்களிலிருந்து பிறக்கின்றன; முருகனின் கரங்கள் பன்னிரண்டு; இவை உற்று நோக்கற் பாலன. முன்கண்டவாறே மீண்டும் முளையெழுத்தாகிய ஓகரம் ஆறு எழுத்துக்களோடு ஒன்றிவிடாது பிரிந்து நின்று ஈசுவரனுடைய திரிபின்மையைக் குறிக்கின்றது. இம்மந்திரத் திலடங்கிய தனித்தனி எழுத்துக்களின் தத்துவமும், அஷ்டக்கிரியைகள் என்ற கருத்தை இவ்வெழுத்துக்கள் எங்ஙனம் விளக்குகின்றன என்பதும், மூல எழுத்தின் எவ்வெப் பகுதிகளினின்றும் இவை ஆக்கப்பெறுகின்றன என்பதை நோக்குவதால் தெளிவாகும்.

பஞ்சாக்ஷரம், ஷடாக்ஷரமாகிய இருமந்திரங்களும் ஐந்து அகரவெழுத்துக்களி லிருந்தே பிறக்கின்றன வென்பதைக் கருத்தில் வைக்கவேண்டும். இம்மந்திரங்களாற் குறிக்கப் படுகின்ற சிவனும் முருகனும், (சாஸ்திரங்கள் கூறுமாறு) ஒரே ஈஸ்வரனின் இரண்டு வடிவங்களே என்ற உண்மை இதனுல் வெளியாகின்றது. ஐந்து பிரணவ அகரங்களிலிருந்து இருமந்திரங்களுந் தோன்றுவது கொண்டு முருகனுஞ் சிவனும் ஒருவரே எனல் புதிதன்று. இருவருடைய முகங்

கள், கைகள், கண்கள் ஆகியவற்றைக் கூட்டி எண்ணி, சாஸ்திரங்களே இருவரும் ஒருவரென விளம்புகின்றனவென்று திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். சிவனுடைய ஐந்து முகங்களும் பத்துக் கைகளும் பதினைந்து கண்களுஞ் சேர்ந்த தொகை முப்பது. முருகனுடைய ஆறுமுகங்களும் பன்னிரண்டு கரங்களும் பன்னிரண்டு கண்களுஞ்சேர்ந்த தொகை முப்பது. சிவனை நோக்குமளவில், கண்களின் தொகை பெரிது. முருகனைப் பார்க்கும்பொழுது, கரங்களின் தொகை உயர்ந்தது. இதனால் முருக மந்திரமாகிய ஷடாக்ஷரம், அஷ்டக்கிரியைகளுக்குச் சிவமந்திரத்தைவிட வாய்ப்புடைத்தென்பது காட்டப்படுகின்றது.

---

## செய்திகளும் குறிப்புகளும்:
## News and Notes

### சிவபுராண மகிமை

இந்திரராகிப் பார்மே லின்பமுற் றினிதுமேவிச்
சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற்சேர்வர்
அந்தமி லவுணர்தங்க ளடல்கெட முனிந்த செவ்வேள்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோதுவோரே.

என்னுங் கந்தபுராண நூற்பயன் செய்யுளுக்கு இலக்கியமாக விளங்கினர். காலஞ்சென்ற திரு. சே. சிவஞானம் பிள்ளை என்பதை அவர்தம் வாழ்க்கையின் ஓர் கூற்றினால் மெய்ப்பிக்கின்றேன்.

பிள்ளை யவர்களுக்கு இளமை தொடங்கிச் சிவபுராண படனத்தில் பத்தியுண்டு. ஒவ்வொரு நாளிரவிலும் திருவிளையாடற்புராணத்தில் சில செய்யுட்களைப் படித்தபிறகே போசனஞ் செய்வார். பெரியபுராணமும் அவ்வப்போது (விசேஷமாகச் சமயகுரவர் குருபூசைக் காலங்களில்)படனஞ்செய்வார். 1903ம் வருடத்தில் சபாபதி நாவலர் மருகரும் மாணக்கரு

மாகிய ச. சிவப்பிரகாச பண்டிதரோடு இவருக்குப் பழக்கம் ஏற்பட்டது. அவரிடம் கந்தபுராணம், திருவானைக்காப் புராணம் முதலியவற்றுள் சிற்சில பாகங்களைப் பாடங்கேட்டார். அதுமுதல் கந்தபுராணப்பற்று அதிகரித்தது. அருமையான பாடல்களை நெட்டுருச்செய்து ஒப்பிப்பார். பிரதிதினமும் கந்தபுராண பாராயணஞ் செய்யும் நியமத்தினைப் பூண்டிருந்தார். இதற்கு அடுத்த வருடமே இவருக்குத் தமிழ்ப் பரீக்ஷகர்வேலை கிடைத்தது. இக்கடமையைச் சில வருடம் செலுத்தினர். இதனல் இவருக்கு அதிக வருமானம் வந்தது. 1904 ம் ஆண்டு முதல் காலஞ்சென்ற கா. நமச்சிவாய முதலியாரோடு சேர்ந்து பள்ளிக்கூடத்துத் தமிழ் வாசக புத்தகங்கள் எழுதலானர். இவருடைய சார்பினலேயே அப்புத்தகங்கள்விருத்தியுற்றன என்பது முதலியாருடைய அபிப்பிராயம். இதனைத் தமிழுலகமும் அறியும். இப்புத்தகக் கூட்டுறவால் இவருக்கு வருமானம் மேன்மேலும் பெருகிற்று. உத்தியோகத்திலிருந்து இளைப்பாறிய பின்னர் வாகனம், மாடமாளிகை முதலிய சுகங்களைப்பெற்று வாழ்ந்தார். இத்தகைய மேலானபதவிக்குக் கொண்டுவந்தது கந்தபுராணமேயாம். உண்மை இவ்வாறிருக்க, புராணங்களைத் தற்காலச் சைவப்பிரசாரகர்கள் புறக்கணிப்பது என்னே? இவர்கள்,

பிறையணி சடைமுடிப் பிரான்தன் காதைகள்
இறையுமோர் மறுவில யாவு மேன்மையே
மறைபல சான்றுள வாய்மையே யவை
அறிஞர்கள் நாடியே அவற்றைக் காண்கவே.

என்னும் பாசுரத்தையும், அப்பர் சுவாமிகள் தசபுராண தேவாரத் திருப்பதிகத்தையும் சிந்திப்பார்களாக.

—சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை.

---

## போர் முடிவு

எதிர்பாராதவகையில் சென்ற ஏழு மாதங்களாக நடைபெற்று வந்த இத்தாலிய அபிசீனியப் போர் ஒருவாறு முடிவு பெற்றது. அபிசீனியா தோல்வியுற்றது; அதன் மன்னர் தம் மனைவி மக்களுடன் நாட்டைத் துறந்து பாலஸ்தீனம் புறப்பட்டார். குண்டுக்கு மிஞ்சிய நீதியுண்டோ?

## முகப்புப் படம்

சென்னை அரசாங்கக் கண்காணிப் பொறிவலாளராகவும் சிவபுரம் பெருநிலக் கிழவராகவு மிருந்து காலஞ்சென்ற தமிழன்னையின் திருமகனார் உயர்திரு பா. வே. மாணிக்கநாய்க்கர் அவர்கள் பொறிநூலிலும், புதுப்பொறிகள் அமைப்பதிலும் தமிழ்நாட்டில் தலைசிறந்து விளங்கியவர்கள் என்பது ஒருதலை. அவர்மாட்டுச் சுடர்விட்டு மிளிர்ந்த அவ்வொட்பம் அவருடன் மறையாமல் அவர் வழித்தோன்றலாகிய அவர் மகனார் திரு. பா. மா. முருகமாணிக்கத்தினிடம் தொடர்ந்து காணப் படுவது பெரிதும் போற்றி மகிழ்தற்பாற்றும். திரு. முருக மாணிக்கம் பதினாறாண்டு நிரம்பிய இளைஞர். இவர் பிள்ளைமைப் பருவத்திலிருந்தே பொறியமைக்குந் துறையிற் காட்டி வந்த நுழைபுலம் வியக்கத்தக்க தாகும். அண்மையில், குறைந்த செலவில் இந்நாட்டிற் கிடைக்கக்கூடிய பொருள் களையே கொண்டு இவ்விளைஞர் பெரியதொரு காற்பொறி (Wind mill) அமைத்துள்ளார். இப்பொறி எத்திசையில் காற்று வழங்கினும் இயங்க வல்லதாயும், மேனாட்டில் அமைக் கப்படும் பொறிகள் சேந்தும் நீரைவிட மிகுதியான நீரைச் சேந்த வல்லதாயும் இருப்பதுங் குறிப்பிடத் தக்கனவாகும். இப்பொறி சென்ற மார்ச்சுத் திங்களில் முதன் முதல் இயக்கப் பட்டது.

முகப்புப் படத்தில் தாமமைத்த காற்பொறியருகில் இளைஞர் திரு. முருக மாணிக்கம் காணப்படுகிறார்.

---

472



சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த, தமிழாராய்ச்சிக்
கழகத் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட

**திருவாளர் S. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L.**